
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 16 [illegible]ப்ரல் 200[illegible]




வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு. இந்தியா

☎04257-230030, 230382. Cell : 98427 - 30382

E-mail : kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

### தொடர்பு முகவரி

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் 27,

காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...

1. ஆசிரியர் உரை 1
2. ஏலகிரி முகாமுக்கு வாருங்கள் 9
3. சுவிசேஷத்தின் உண்மைகள் 10
4. பெண்கள் பகுதி 13
5. வாலிபர் பகுதி 17
6. சிறுவர் பகுதி 20
7. எபேசியர் ஒரு கண்ணோட்டம் 22
8. மகிமையின் இரத்தம் 23
9. அதிக மேன்மையான வழி 26
10. மனுஷருக்குள்ளே மேன்மை 29

# THIRUMARAI AASAAN

*PUBLISHED BY CHURCH OF CHRIST*

**Editor** **S. Rajanayagam** | **Honorary Editor** **J.C. Choate**

**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India**

*Pleading for the restoration of pure New Testament Christianity*

**Vol.16 | April- 2003 | Issue-4**

**ஆசிரியர் உரை**

# தாகமாயிருக்கிறேன்

இப்பூவுலகில் மனிதர்களாகப் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லோருக்குமே பொதுவானது என்று சில காரியங்கள் உண்டு. பொதுவானவைகள் என்று சொல்லப்படுபவைகளுக்கு விதிவிலக்காக யாருமே இருக்க முடியாது. அரசனாக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் அது தான் உண்மை. அப்படிப் பொதுவானவைகள் என்று சொல்லப்படுபவைகளில் பிரதானமாக பசியையும், தாகத்தையும் குறிப்பிடலாம். இந்தப் பசியும், தாகமும் இப்பூவுலகில் மானிடராய்ப் பிறந்து வாழ்ந்த தேவமைந்தனாகிய நமதாண்டவரையும் விட்டு வைக்கவில்லை. இப்படி பசி, தாகம் போன்றவை எல்லோருக்கும் பொதுவானதாக இருக்கிறபடியால், ஒருவன் பசியாயிருக்கிறேன் என்று சொல்வதிலோ, தாகமாயிருக்கிறேன் என்று சொல்வதிலோ ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

ஒருவேளை, தாகமாயிருக்கிறேன் என்று ஒருவன் சொல்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையென்பது உண்மையாக இருந்தாலும், ஒருவகையில் **தாகமாயிருக்கிறேன்** என்ற வார்த்தை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக, கருத்துச் செறிவுமிக்க வார்த்தையாகவும், கவனிக்கத்தக்க வார்த்தையாகவும், சொல்லப்படும் வார்த்தையாகவும் பேசப்படும் வார்த்தையாகவும், பிரசங்கிக்கப்படும் வார்த்தையாகவும் மாறியிருக்கிறது. ஆம், இவ்வார்த்தை மிகுந்த சொல்வாக்குள்ள ஒன்றாக மாறி, ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒருவேளை இவ்வார்த்தை விசேஷமாகப் பேசப்படுகின்ற தபசு காலம் அல்லது லெந்து நாட்கள் என்று சொல்லப்படுபவைகள் வேதாகம அங்கீகாரத்தைப் பெறாதவைகளாக இருந்தாலும், இவ்வார்த்தை வேதாகமத்தில் இல்லாத ஒரு வார்த்தையல்ல. இயேசுவானவரின் சிலுவை வார்த்தைகளில், ஒன்றாக இவ்வார்த்தை இருக்கிறபடியால், உலகெங்கிலும் இவ்வார்த்தை பேசப்பட்டு வருகிறது.

சிலுவை வார்த்தைகளில் இது ஐந்தாவது என்று பெரும்பான்மையான கிறிஸ்தவ சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பொதுவாக, ஒரு வார்த்தை முக்கியத்துவம் பெற்று, ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறதென்றால், அதற்கு அவ்வார்த்தையின் சொல்லர்த்தம் மாத்திரம் காரணமாக இருக்க முடியாது. மாறாக, இவ்வார்த்தை யாரால் பேசப்பட்டது, எப்பொழுது பேசப்பட்டது, எங்கே பேசப்பட்டது, ஏன் பேசப்பட்டது போன்றவைகளும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும். இதனடிப்படையில் நாம் கவனித்தால், "தாகமாயிருக்கிறேன்" என்ற இயேசுவின் சிலுவை வார்த்தை, மிகவும் சிறப்புக்குரியதாயிருந்து, பேசப்படுவதற்கு ஏற்றதாகவும், பிசங்கிக்கப்படுவதற்கு உகந்ததாகவும் மாறியிருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இயேசுவானவர், தாகமாயிருக்கிறேன் என்று சொன்னதின் சரியான பின்னணியை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், அதற்கு முந்தின சிலுவை வாக்கியத்தின் தன்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். "என் தேவனே, என் தேவனே என் என்னைக் கைவிட்டீர்?" என்று தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கும், மூல வார்த்தைகளாகிய, **எலோயீ, எலோயீ லாமா சபக்தானி**" என்று அப்பொழுது சொன்னார் (மாற்கு. 15; 34). அவர், எலோயீ எலோயீ என்று சத்தமிட்டது, கூடியிருந்தவர்களுக்கு எலியா, எலியா என்று கூப்பிட்டதாகக் கேட்டிருக்கிறது. சிலுவை வார்த்தைகள் என்று வர்ணிக்கப்படுபவைகளுள் மிகவும் சர்ச்சைக்குரிய வாக்கியம் இதுதான். அதாவது, அவர் என்ன சொன்னார் என்பது கூடியிருந்தவர்களுக்கு விளங்கவில்லை. அப்படியானால், இந்த சர்ச்சைக்குக் காரணம் என்ன? அவர் என்ன சொன்னார் என்பதில் சர்ச்சை ஏற்படும் அளவுக்கு அவர் வார்த்தைகளில் ஏன் தெளிவில்லாமல் போயிற்று? இவைகள் நம்முன் எழும் கேள்விகள். இதற்கான பதில், அடுத்த சிலுவை வாக்கியத்தில் உள்ளது. ஆம், "**தாகமாயிருக்கிறேன்**" (யோவான்.19: 28) என்று சொன்னாரல்லவா அதில் அப்படியே அடங்கியிருக்கிறது.

தாகம் என்று சொல்லும்போது, வேலை அலுப்பின் நிமித்தமாகவும், பிரயாணக் களைப்பின் நிமித்தமாகவும் நமக்கெல்லாம் உண்டாகிறதே அந்தத் தாகம் அல்ல. அங்கே இயேசுவானவருக்கு ஏற்பட்ட தாகம் வழக்கத்திற்கும் மாறானது, முற்றிலும் வேறுபட்டது. சிலுவையில் அவருக்கு ஏற்பட்ட தாகம், அவருடைய நாவை உலரப் பண்ணி வறண்டு போகச் செய்த தாகம். நாவை வீங்கச் செய்த தாகம். நாவு அங்கும் இங்கும் பிறழ முடியாமல் வாயோடே ஒட்டிக் கொண்ட தாகம். வார்த்தைகளை வெளிக்கொணர முடியாமல் தடுமாறச் செய்த தாகம். பேசுவது இன்னதென்று புரியாமல் செய்த தாகம். இப்படிப்பட்ட தாகம் அவருக்கு இருந்தபடியால் தான், நமதாண்டவர் **தாகமாயிருக்கிறேன்** என்று சொன்னார்.

இயேசுவானவர் சிலுவையில் பேசினவைகளை, சிலுவை வார்த்தைகள் என்று சொல்வோரும் உண்டு. சிலுவை வாக்கியங்கள் என்று சொல்வோரும் உண்டு. சிலுவைச் செய்தி என்று சொல்வோரும் உண்டு. ஒருவேளை சிலுவையில் பேசின ஒவ்வொன்றும் சிலுவைச் செய்தியானால்,

"தாகமாயிருக்கிறேன்" என்ற வார்த்தையும் ஒரு சிலுவைச் செய்திதான். சிலுவையில் பேசினவைகளில், மிகவும் சுருக்கமானது இது தான். அத்தோடு தன்னுடைய சரீரத் தேவையினிமித்தமாக அவர் பேசின ஒரே வார்த்தையும் இதுதான்.

சரி, "தாகமாயிருக்கிறேன்" என்ற சிலுவை வார்த்தையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடிய பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I "தாகமாயிருக்கிறேன்" என்பது இயேசுவானவரின் மனிதத் தன்மையைக் காட்டுகிறது

சிலுவையில் மரிக்கும் போது, "தாகமாயிருக்கிறேன்" என்று அவர் சொன்னதிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற முதல் பாடம், இயேசுவானவர் இப்பூமியில் இருந்த போது, முழுமையாக மனிதனாகவும் இருந்தார் என்பது.

நமதாண்டவர், இப்பூமியில் மனிதராக இருந்தாரா? அல்லது தெய்வீகம் நிறைந்தவராக இருந்தாரா என்றதொரு கேள்வியைக் கேட்டால், அவர் இரண்டும் உடையவராக இருந்தார் என்றே பதில் வரும். அது எப்படி என்று மீண்டும் கேட்டால், இவ்விதம் பதிலளிக்க முடியும். எப்படியொரு குழந்தையை, முழுமையாக தகப்பனுடைய குழந்தை என்றும் தாயினுடைய குழந்தை என்றும் சொல்லமுடியுமோ அது போலவே, இயேசுவானவரையும், பரலோக தகப்பனுக்கு முழுமையான மகன் என்றும் அதே சமயத்தில், பூமிக்குரிய தாய்க்கும் முழுமையான மகன் என்றும் கூற முடியும். இப்படி பரலோக தகப்பனுடைய மகன் என்றளவில், தெய்வீகம் நிறைந்தவரென்றும், பூமிக்குரிய தாயினுடைய மகன் என்றளவில் மனிதத் தன்மையுடையவரென்றும் சொல்லமுடியும். **இந்த இரட்டைத் தன்மையை** அவருடைய வாழ்க்கையில் அடிக்கடி நாம் பார்க்க முடியும்.

பூமிக்குரிய தாயின் மகன் என்றளவில் ஒரு சமயம் படகில் செல்லும் போது நம்மைப்போன்றே களைப்புற்று **உறங்கினார்**(மத்.8;24) ஆனால், கடலில் பெருங்காற்று உண்டாகி, சீஷர்கள், ஆண்டவரே எங்களை இரட்சியும் என்று அலறினபோது, பரலோகத் தகப்பனின் மகன் என்றளவில் தெய்வீகம் நிறைந்தவராய், **கடலையும், காற்றையும் அதட்டினார்** (மத். 8; 26). அதுபோலவே, ஒரு தாயினுடைய மகனாக, மனிதத் தன்மையோடு லாசருவின் கல்லறையருகில் தன் உணர்வுகளை அடக்க முடியாமல் பெலவீன மனிதனைப் போல **"கண்ணீர் விட்டார்"** (யோவான்.11 ; 35). ஆனால், பரலோகத் தகப்பனுடைய குமாரன் என்றளவில் தெய்வீகம் நிறைந்தவராய் **"கல்லை எடுத்துப் போடுங்கள்"** என்று சொன்னதோடு (11, 39) **"லாசருவே வெளியே வா"** என்று உரத்த சத்தமாய்க் கூப்பிடவும் செய்தார். மரித்த லாசருவும் அங்கே உயிரோடே வந்தான் (11;44).

இப்படி தெய்வீகம் நிறைந்தவராக இருந்தபோதும் அவருக்குத் தாகம் உண்டாயிற்றென்று பார்க்கிறோம். இயேசுவானவருக்கு சிலுவையில் மாத்திரம் தாகம் உண்டாகவில்லை. இப்பூமியின் வாழ்க்கையில் அவர் இருந்தபோது, நம்மைப் போன்றே சோர்வுற்ற போதெல்லாம் அவருக்கும்

தாகம் ஏற்பட்டது. ஒரு சமயம் ஊழியப் பயணத்தால் களைப்புற்ற அவர், யாக்கோபின் கிணறு என்று நம்பப்படுகின்ற கிணற்றண்டையில், யூதர்கள் சம்பந்தம் கலவாத சமாரியப் பெண்ணிடம் "**தாகத்துக்குத் தா**" என்று கேட்டு, ஓர் உரையாடலை ஆரம்பித்து, உண்மை நிலையை அம்பலப்படுத்தி, இறுதியில் ஒரு மாபெரும் ஆவிக்குரிய உண்மையை வெளிப்படுத்தினார். (யோவான். 4: 7-24). ஆனால், இங்கோ தன்னுடைய பூமிக்குண்டான பிரயாணத்தின் இறுதியில் நம் ஒவ்வொருவரின் ஆவிக்குரிய தாகத்தைத் தீர்க்கும்படியாக "**தாகமாயிருக்கிறேன்**" என்று கூறுகிறார்.

நம்முடைய இயேசுவானவர், மனிதனாகவும் இருந்தார், என்பதற்கு தாகம் ஒரு சரியான சான்றாக இருக்கிறது. இன்னும் அவர், ஞானஸ்நானம் பெற்ற உடனே, பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு வனாந்திரத்திற்குள் கொண்டு போகப்பட்ட போது அங்கே அவருக்குப் "**பசியுண்டாயிற்று**" என்று பார்க்கிறோம் (மத்.4:2) இங்கே அவருடைய பசியையும், தாகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் என்ன விளங்குகிறது? **ஊழிய ஆரம்பம் பசியோடு, ஊழிய முடிவு தாகத்தோடு.** பசியும், தாகமும் இல்லாத இடத்திலிருந்து வந்தவருக்கு (வெளி.7:16, 17) பசியும், தாகமும். இதெப்படி? இந்தப் பசியும், தாகமும் சுத்தமாக மனிதத் தன்மையோடு தொடர்புடையதாகையால், "தாகமாயிருக்கிறேன்" என்று உரைத்தது அவரின் மனுஷீகத்திற்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட சான்றாக இருக்கிறது.

## II. 'தாகமாயிருக்கிறேன்' என்பது அவருடைய வேதாகமம் அறிவின் ஆழத்தைக் காட்டுகிறது.

சிலுவையில் மரிக்கும் போது, "தாகமாயிருக்கிறேன்" என்று இயேசுவானவர் சொன்னதிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம், அவருக்கு இருந்த வேதாகம அறிவு பற்றியது.

ஒருவேளை பாடுகளுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில் அவர் தாகமாயிருக்கிறேன் என்று சொல்லியிருந்தாலும், ஏன் அவர் அப்படிச் சொன்னார் என்பதற்கு வேத வசனம் ஓர் அருமையான காரணத்தைக் கூறுகிறது. ஆம், "**வேத வாக்கியங்கள் நிறைவேறத் தக்கதாக தாகமாயிருக்கிறேன்**" என்று அவர் சொன்னதாக. (யோவான். 19; 28) வேத வாக்கியங்கள் தேவ சித்தத்தைக் கொண்டிருப்பதால், அவைகளை நிறைவேற்றவே அவர் பூமிக்கு வந்தார். அவர் இப்பூமியில் இருந்தபோது, "**நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்றார் (யோவான்.4;34).**

அப்படியானால், "தாகமாயிருக்கிறேன்" என்று சொன்னதின் மூலம் எந்த வேத வாக்கியத்தை நிறைவேற்றினார்? இங்கே, சங்கீதம் 69; 21ஐக் கவனியுங்கள். "என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்" என்று உள்ளது. இவ்வசனத்தில் அவருடைய **சிலுவைத் தாகம் பற்றி முன்னறிவிக்கப் பட்டுள்ளது.**

இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டபோது, இரண்டு வித்தியாசமான நேரங்களில், இரண்டு வகையான பானம் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவது பானம், சிலுவைப் பாடுகளின் ஆரம்பத்தில், அதாவது காலை 9 மணியளவில். கசப்புக் கலந்த இந்த பானம் **ஒருநோக்கத்தோடு** அந்நாட்களில் சிலுவைக் குற்றவாளிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, **குற்றவாளியின் உணர்வுகளை மழுங்கடிப்பதற்காக.** ஆனால், இயேசுவானவரோ, சிலுவையில் பேசவேண்டிய, நிறைவேற்ற வேண்டிய காரியங்கள் இன்னும் இருந்தபடியால், உணர்வுகளை மழுங்கடிக்கும் அப்பானத்தை ருசி பார்த்து குடிக்க மறுத்து விட்டார். (மத். 27; 34) இப்படி மறுத்ததின் மூலம், சங்கீதம் 69; 21-ல் சொல்லப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் துல்லியமாக நிறைவேறுவதற்கும் வழி செய்து விட்டார். எப்படியெனில் சங்கீதம். 69; 21. என் தாகத்துக்குக் காடியைக் கொடுத்தார்கள் என்று சொல்லுகிறது. இங்கே சொல்லப்படும் இந்த இரண்டாவது பானம், சிலுவைப்பாடுகளின் முடிவில் கொடுக்கப்பட்ட ஒன்று. அதாவது மாலை 3 மணி போல். "உடனே அவர்களில் ஒருவன் ஓடி கடற்காளானை எடுத்து காடியில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்தான்" என்று சொல்லப்பட்டுள்ளது. (மத் 27; 48.)

ஓடிப்போய் இப்பானத்தைக் கொடுத்தவன், வேத வாக்கியம் நிறைவேற வேண்டுமென்று கொடுத்தானா? கண்டிப்பாக இல்லை. அல்லது தாகத்தால் துடிக்கிறாரே, சரி போகட்டும் என்று தான் கொடுத்தானா? அதுவும் இல்லை. பின்னே எதற்காகக் கொடுத்தான்? "எலோயீ, எலோயீ" என்று அவர் சொன்னது, எலியாவைக் கூப்பிடுவது போல் தெரிந்தபடியால், அவர் சொல்லுவது தெளிவாகக் கேட்கும்படி, அவருடைய நாவு கொஞ்சம் ஈரமாகட்டும் என்று தான் கொடுத்தானேயொழிய, நெஞ்சில் கொண்ட ஈரத்தால் கொடுக்கவில்லை. இது உண்மைதான் என்பதை சங்கீதம். 69; 20 தெளிவாகச் சொல்லுகிறது. **"நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப்படுகிறேன். எனக்காகப் பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன். ஒருவனும் இல்லை. தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன்"** என்றுள்ளது. அதாவது, அவருடைய வேதனையைக் கண்டு பரிதபிக்கிறவனோ, தேற்றுகிறவனோ ஒருவனும் இல்லையென்று. ஆகவே, இரக்கம் என்பது அங்கே மருந்துக்கும் இல்லவே இல்லை.

ஆயினும், சிலுவைப்பாடுகளின் ஆரம்பத்தில் கொடுத்த முதல் பானத்தை ஏற்றுக் கொள்ள மறுத்த இயேசுவானவர், இந்த இரண்டாவது பானத்தை எதிர்ப்பும் மறுப்பும் இல்லாமல் ஏற்றுக் கொண்டார். யோவான் நற்செய்தியாளர், **"இயேசு காடியை வாங்கின பின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக் கொடுத்தார்" என்று கூறுகிறார்.** அங்கே அவர் ஏற்றுக் கொண்டது, அவரது தாகத்தைத் தீர்க்கும்படியான பானத்தையல்ல. மாறாக "**எல்லாம் முடிந்தது**" என்பதைத் தெளிவாகச் சொல்ல உதவிய பானத்தையே. இதன் மூலம், வேத வாக்கியம் நிறைவேற வேண்டுமென்பதில் அவர் எவ்வளவு அக்கறையுள்ளவராக

இருந்தார் என்பது தெளிவாகிறது. அப்படியானால் வேத வாக்கியம் நிறைவேற வேண்டுமென்ற அக்கறை அவருக்கு எப்படி வந்தது? வேத வாக்கியங்களை அவர் துல்லியமாக அறிந்து வைத்திருந்ததாலேயே.

ஆகையால், அருமையானவர்களே தேவ சித்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிற நாம் ஒவ்வொருவரும் வேத வாக்கியங்களைத் துல்லியமாக அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். அப்பொழுது தான் அவைகளை நிறைவேற்றுவதற்கு நம்முடைய பங்கை நாம் சரியாகச் செய்ய முடியும். வேத வாக்கியங்களை நாம் அறியாமலிருந்தால், தேவன் சம்பந்தப்பட்ட காரியங்களில், நாம் தப்பான எண்ணமுள்ளவர்களாகவே இருப்போம். (மத். 22; 29) ஆகவே, தேவ சித்தத்தையும், அவர் நமக்காக வைத்திருக்கிற இரட்சிப்பின் திட்டத்தையும் தெளிவாக அறிந்து கொள்வதற்கும், அதன்படி செய்வதற்கும் வசனங்களுக்குள்ளாச் செல்வோம். இயேசு ஆண்டவரைப் போல், உயிர் போகிற நேரத்திலும், வேத வசனங்களுக்காக நம்மை ஒப்புக்கொடுப்போம்.

**III. "தாகமாயிருக்கிறேன்" என்பது அவருடைய பாடுகளின் தீவிரத்தைக் காட்டுகிறது.**

இயேசுவானவர் சிலுவையில் மரிக்கும் போது "தாகமாயிருக்கிறேன்" என்று சொன்னதிலிருந்து, நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், அவருடைய பாடுகளின் தீவிரம் பற்றியது.

இயேசு ஆண்டவரின் சிலுவைப் பாடுகளை அதன் உண்மைத்தன்மையோடு எடுத்துரைத்தால் கல்நெஞ்சும் கண்டிப்பாகக் கரையும். ஆம், அது அவ்வளவு வியாகுலம் நிறைந்தது. சங்கீதக்காரன், இயேசுவின் சிலுவைப் பாடுகளின் கொடுமை பற்றி இவ்விதம் சித்தரித்திருக்கிறார். "தண்ணீரைப் போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது. என் இருதயம் மெழுகு போலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. என் பெலன் ஓட்டைப் போல் காய்ந்தது; என் நாவு மேல்வாயோடே ஒட்டிக் கொண்டது; என்னை மரணத்தூளிலே போடுகிறீர். நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்து கொண்டது. என் கைகளையும், கால்களையும் உருவக் குத்தினார்கள்" என்று (சங் 22; 14-16). இப்பகுதியில், நாம் கவனிக்கத்தக்கது, **"என் பெலன் ஓட்டைப் போல் காய்ந்தது, என் நாவு மேல் வாயோடே ஒட்டிக் கொண்டது" என்பது.** குயவனால், சுடப்பட்ட ஓட்டைவிட வறட்சி கொண்டதாக எதுவுமே இருக்க முடியாது. அப்படித்தானே. ஆனால், **இயேசுவானவரின் சரீரம் அந்த ஓட்டைப் போல காய்ந்ததாம்.**

அவருடைய சரீரம் ஓட்டைப் போல் காய்ந்து, நாவு மேல் வாயோடே ஒட்டிக் கொண்டதென்றால், அச்சரீரத்தை என்னமாய்ப் பாடுபடுத்தியிருப்பார்கள் என்று எண்ணிப் பாருங்கள். சிலுவை மரணம் என்பது கொடுங்குற்றவாளிகளுக்காகவே கண்டுபிடிக்கப்பட்டு, பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஒன்று. ஒரு குற்றவாளி சிலுவைக்குக்

கொண்டு போகப்படுவதற்கு முன்பாக, கடுமையான முறையில், ஈவு இரக்கமில்லாமல், பலமிக்க இரண்டு ரோமச் சிப்பாய்களால், மாறி, மாறி சவுக்கால் அடிக்கப்படுவான். பல பிரிவுகளைக் கொண்ட அந்தத் தோல் சவுக்கின் நுனியில், இரும்புக் குண்டுகளும், முட்களும், எலும்புத் துண்டுகளும் பொருத்தப்பட்டிருக்கும். சவுக்கடி நிறைவேறியதற்குப் பின் குற்றவாளியின் சரீரத்தை, குறிப்பாக முதுகைப் பார்த்தால், **உழவன் நிலத்தை ஏர் பூட்டி உழுதது போல் இருக்குமாம்.** அச்சவுக்கடியின் போது ஏராளமான இரத்தம் வெளியேறும். சிலுவை மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட சிலர், சவுக்கடியின் போதே இறந்து போவதும் உண்டு.

இப்படி சவுக்கடியின் போது ஏராளமான இரத்தமும், தண்ணீரும் வெளியேறிய நிலையில், குற்றவாளி சிலுவையில் அறையப்பட்டு, வெட்டவெளியில், உச்சி வெயிலில் தொங்கவிடப்படுவான். அப்பொழுது, சரீரம் கிட்டத்தட்ட கருவாடு போல் காய்ந்து போய்விடும். வியர்வை கொஞ்சம் வெளியே வந்தாலே, தண்ணீர் கேட்கும் சரீரம், வியர்வையும், இரத்தமும், தண்ணீரும் ஒட்டு மொத்தமாக வெளியே வந்த பிறகு, வெயிலிலும் காய்ந்து தொங்கி கொண்டிருக்கும் போது, **தாகத்தால் எப்படித் தவித்திருக்கும் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?** சவுக்கடியாலும், ஆணிகள் கடாவப் பட்டதால் உண்டான வேதனையாலும், பாரச் சிலுவையைச் சுமந்ததால் ஏற்பட்ட களைப்பாலும், முட்கிரீடம் சூட்டப்பட்டதால் நேர்ந்த வலியாலும் அனுபவித்த கொடுமைகள் போதாதென்று, இங்கே **புதுவேதனையாக தாகமும்** சேர்ந்து கொண்டது.

எப்பொழுதாவது விபத்து நடந்த இடத்திற்கு உடனடியாகப் போய் பார்க்கும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்திருக்குமானால், **தாகத்தின் கொடுமையை** உங்களால் உணர்ந்து கொள்ள முடியும். விபத்தில் சிக்கி, இரத்தம் வழியத்தக்கதாக காயம் ஏற்பட்டு அல்லது சரீரத்தின் ஒரு பகுதி சிதைந்து, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஒருவன், அத்தனை வலி, வேதனைகளுக்கும் மத்தியில் தாகத்தின் கொடுமையை எல்லாவற்றுக்கும் மேலாக உணர்ந்தவனாக, எனக்கு உதவி, எனக்கு உதவி என்று சத்தமிடாமல், **"ஐயோ, தண்ணீர், ஐயோ தண்ணீர்"** என்று சத்தமிடுவான். அங்கே, தாகம் என்பது எல்லா வேதனைகளையும் கடந்ததாக இருக்கும். ஆகையால், தாகமாயிருக்கிறேன் என்று இயேசுவானவர் சொன்னதிலிருந்தும், அவர் என்ன சொன்னார் என்பது மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவருடைய நா வறண்டு போனதிலிருந்தும், அவருடைய சரீரம் எவ்வளவு பாடுகள் பட்டிருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. **அவருடைய பாடுகளையும், வேதனைகளையும், வியாகுலங்களையும் உறுதி செய்வதாகவே அவரடைந்த தாகம் இருக்கிறது.** மொத்தத்தில் சிலுவைப் பாடுகளின் தீவிரத்தை இயேசுவின் தாகம் ஒட்டு மொத்தமாக எடுத்துரைக்கிறது.

இப்படியாக, இயேசுவின் சிலுவைத் தாகம் நமக்கு மூன்று பாடங்களைக் கற்றுக் கொள்ள உதவியிருக்கிறது. நாம் நித்திய காலத்தில்

தாகமடையாமலிருக்கவே, அவர் இப்பூமியில் இவ்விதம் தாகமானார். நாம் இந்த பூமியிலே தாகமுள்ளவர்களாயிருப்போமானால், நித்தியத்தில், பரலோக வாழ்வில் தாகமற்றவர்களாக இருக்க முடியும். அப்படியானால் எதன் மீது நாம் இவ்வாழ்வில் தாகமுள்ளவர்களாயிருக்க வேண்டும்? மலைப் பிரசங்கத்தில் நமதாண்டவர் **நீதியின் மேல் பசி, தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்** என்று கூறியுள்ளார் (மத். 5 ; 6). அப்படியானால் நீதி என்பது என்ன? தாவீது சொல்லும் போது, **உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்** என்று கூறுகிறான் (சங் 119 ; 172). இதன் பொருள், தேவனுடைய கற்பனைகளாகிய வேத வசனங்கள் நீதியுள்ளவை களாயிருக்கிறது. அவைகளின்பால் நாம் ஒவ்வொருவரும் தாகம் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அதாவது, இயேசுவானவர் அவை களை நிறைவேற்றுவதில் எப்படி அக்கறையுள்ளவராக தன்னுடைய உயிர் போகும் நிலையில் கூட இருந்தாரோ, அது போல நாம் வேத வாக்கியங்களை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

மேலும், "இயேசுவானவர், தாகமாயிருக்கிறவன் என்னிடத்தில் வரக்கடவன்" என்று சொல்லியிருக்கிறார். (யோவான்.7; 37). இன்னும், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகம் அடையான் என்றும் சொல்லியிருக்கிறார். (யோவான் 6 ; 35 ) ஒருவன் நித்திய காலத்தில் தாகமடையமாலிருக்க கிறிஸ்துவிடம் வரவேண்டும். **கிறிஸ்துவினிடம் வருவதென்றால், ஒருவன் கிறிஸ்துவின் உபதேசத்தண்டை வரவேண்டும்.**

கிறிஸ்துவின் உபதேசமாக இன்றைக்குப் புதிய ஏற்பாடுதான் இருக்கிறது. (II. யோவான்.9) ஆகவே, புதிய ஏற்பாட்டு உபதேசப்படி தான் நமது ஆவிக்குரிய காரியங்கள் அனைத்தும் இருக்க வேண்டும். நம்முடைய பக்தி, நம்முடைய ஞானஸ்நானம், நம்முடைய இரட்சிப்பு, நம்முடைய ஆராதனை முறை, நாம் சார்ந்திருக்கும் சபை, நம்முடைய நம்பிக்கை, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய நம்முடைய எதிர்பார்ப்பு என இவை அனைத்தும் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் படி தான் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் உபதேசமாகிய புதிய ஏற்பாட்டில் நிலைத்திராதவன் தேவனை உடையவனல்ல.

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் நிலைத்திராவிட்டால், நாம் நரகத்தில் போய்ச் சேர்ந்து நித்திய காலத்துக்கும் தாகமுள்ளவர்களாய் மாறிவிடுவோம். பிறகு, லாசரு ஐசுவரியவான் உவமையில் வரும், ஐசுவரியவானின் கதிதான். விரலின் நுனித் தண்ணீருக்காக என்றென்றும் ஏங்கிக் கொண்டிருக்க வேண்டியதுதான். (லூக்.16:24) ஆகையால், கிறிஸ்துவானவர் நமக்காகக் கல்வாரிச் சிலுவையில் அடைந்த தாகத்தின், உன்னத நோக்கத்தை வீணடித்தவர்களாக மாறிவிடாமல் நீதியாகிய வேத வசனங்களின் மீது பசி தாகமுள்ளவர்களாயிருப்போமாக! ஆமென்.

**செ. ராஜநாயகம்.**

# காங்கயம் கிறிஸ்துவின் சபையார் நடத்தும் வேனிற்கால வேதாகம முகாம்

## மற்றும்

# திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : **YMCA வளாகம்,** ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ)

நாள் : **மே மாதம் 5,6,7-2003** (திங், செவ், புதன்)

**சிறப்பம்சங்கள்**

- ❖ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க அருமையான சந்தர்ப்பம்.
- ❖ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தரும் தலைசிறந்த ஊழியர்கள்.
- ❖ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் வல்லமையான தேவச் செய்திகள்
- ❖ கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
- ❖ குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை
- ❖ பெண்களுக்கு தனி இடவசதி உண்டு
- ❖ ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் அருமையான பாடல்கள்
- ❖ பெண்கள், வாலிபர் மற்றும் குழந்தைகளுக்குத் தனித்தனி வகுப்புகள்

**உணவும், தங்குமிடமும் இலவசம்**
பதிவுக் கட்டணம்
பெரியவர்கள் **ரூ. 100/-** சிறியவர்கள் **ரூ. 50/-** மட்டும்

**கிறிஸ்துவின் சபை**
288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
Phone : 04257 - 230030 Cell : 98427 - 30382

*குறிப்பு : சுமார் 300 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

# சுவிசேஷத்தின் உண்மைகள்

**வே**த வாக்கியங்கள், இயேசு கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று தெளிவாக போதிக்கிறது. இயேசுவின் வாழ்வில் நடந்த இந்த நிகழ்வுகளைத் தான் நாம் சுவிசேஷத்தின் உண்மைகள் என்று அழைக்கிறோம். கொரிந்து சபையாருக்கு அவர் எழுதிய நிருபத்தில் இதை ஒவ்வொன்றாக எழுதியிருக்கிறார். அதை அவர்களுடைய இரட்சிப்போடு சம்பந்தப்படுத்தியிருக்கிறார். "அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங் கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய் நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதிலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, என்று (1. கொரி. 15; 1-4). வேறு வார்த்தைகளில் சொல்லுவோமானால், கிறிஸ்துவின் சுவிசேஷம் இந்த உண்மைகளை சார்ந்திருக்கிறது. கிறிஸ்து மரிக்கவில்லையென்றால், அடக்கம் செய்யப்படவில்லையென்றால், உயிரோடு எழுந்திருக்கவில்லை யென்றால் சுவிசேஷம் இருந்திருக்காது, அப்படியானால், இரட்சிப்பு இருந்திருக்காது. ஆனால் அவர் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த் தெழுந்தது உண்மையாக இருப்பதால், நமக்கு சுவிசேஷத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டது. அது உலகத்தை தலைகீழாக மாற்றியிருக்கிறது.

நாம் இப்பொழுது சுவிசேஷத்தின் உண்மைகள் ஒவ்வொன்றாக காண்போம்.

## 1. கிறிஸ்துவின் மரணம்

வேதாகமம் கிறிஸ்து மரித்தார் என்று மீண்டும் மீண்டும் சொல்கிறது. தேவ வார்த்தைகளுக்கு செவிகொடுங்கள். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்; தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி : 2 ; 5-8). கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்து ஆவியானவர் சொல்லுகிறதாவது; "என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொரு வருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப் பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்" (எபி. 2 ; 9).

கிறிஸ்து யாருக்காக மரித்தார்? எபி. 2 ;9ல் அவர் எல்லா மனுஷர்களுக்காகவும் மரித்தார் என்று பார்த்தோம். அவர் பாவிகளுக்காக மரித்தார் என்றும் வேதாகமம் சொல்கிறது. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால், தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர். 5 ; 8) ஆனால், எதற்காக அவர் பாவிகளுக்காக மரித்தார்? இரட்சிப்பையும், நம்பிக்கையையும் நமக்கு தருவதற்காக, "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (I. தீமோ.2; 4). "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (II பேதுரு. 3; 9)

உங்களுக்காகவும், எனக்காகவும் ஒருவர் மரித்திருக்கிறார். தயவாக இதை நினைத்துப் பாருங்கள். நாம் பாவிகளாக, தேவனுக்குப் பகைஞர்களாக இருக்கையிலும் கிருபைக்கும், இரக்கத்திற்கும் தகுதியில்லாதவர்களாக இருக்கும்போதும், பாவமும் துன்பமும் நிறைந்த இந்த பூமிக்கு வந்து நமக்காக மரிக்கவும் அவர் முன் வந்தார். அதனால் தான் நமக்கு நம்பிக்கையும், நித்திய ஜீவனும் கிடைக்கிறது. எத்தனை அருமை. ஆனால், கொஞ்சம் நினைத்துப் பாருங்கள், அவர் சர்வலோகத்திற்காகவும் மரித்தவர். அவருக்கு நன்றியுள்ளவர்களாக நாம் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும். அதைவிட நாம் குறைவாக எப்படி செய்யமுடியும்?

## 2. கிறிஸ்துவின் அடக்கம்

கிறிஸ்து சிலுவையில் மரித்தபின் வேதம் சொல்கிறது "சாயங்காலமான போது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான். அங்கே மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்" (மத்.27; 57-61).

கிறிஸ்துவின் அடக்கத்தில் வித்தியாசமானதோ, நடைமுறையில் இல்லாததோ நடக்கவில்லை. ஒவ்வொரு நாளும் மனிதன் மரிக்கிறான், அவன் அடக்கம் பண்ணப்படுகிறான். சிருஷ்டிப்பின் காலத்திலிருந்தே இப்படித்தான் இருக்கிறது. ஆனால் நம் ஆண்டவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிரோடு எழுவேன் என்று வாக்கு செய்தார், அவர் சொன்னார் "இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக : இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள்; மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்" (யோவான். 2; 19). அவர் இதை சொன்னபோது அவரை புரிந்து கொள்ளவில்லை, அறிந்திருந்தால் விசுவாசித்திருப்பார்கள்? அவருடைய

மரணத்திற்குப்பின் என்ன நடந்தது? எல்லாம் இழந்து போனது என்ற நினைப்புக்கு அந்த சீஷர்கள் வந்தார்கள். அதற்குப் பின்பு என்னவாயிற்று? இயேசு வாக்கு செய்தபடியே உயிரோடு எழுந்தார்.

## 3. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

சிலுவையில் கிறிஸ்து மரித்து கல்லறையிலே இருந்திருப்பாரானால் உலகம் அவரை மறந்தே போயிருக்கும், அவரை பொய்யானவர் என்று மாத்திரம் ஒருவேளை நினைத்திருப்பார்கள். அவர் மரித்து கல்லறையிலே இருந்திருப்பாரானால் மற்ற மனிதர்களிலிருந்து அவர் எப்படி வேறு பட்டிருப்பார்? ஆனால் இயேசு வித்தியாசமானவர். அவர் தேவ குமாரன், அவர் கல்லறையிலிருந்து எழுவேன் என்றார் அப்படியே செய்தார். (மத்.28அதி). அவருடைய உயிர்த்தெழுதலினால் நமக்கு இரட்சிப்பு உண்டு, நாமும் உயிரோடு எழுவோம் என்றும், நித்திய ஜீவனைப் பெறுவோம் என்ற நம்பிக்கையும் நமக்கு உண்டு.

ஆண்டவரின் உயிர்த்தெழுதலைப் பற்றி சில வசனங்களைக் கவனிப்போம்.

"இயேசு கிறிஸ்துவைக் குறித்து தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வானவர் மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார்" (ரோமர்.1; 4,5)

"இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும் படிக்கும், (பிலிப்பியர்.3;10) "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (I. பேதுரு 3:21) "மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" (ரோமர்.6;9).

கிறிஸ்து, மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, உயிரோடு எழுந்ததினால், இப்பொழுது அவர் ஆண்டவரும் இரட்சகருமாக இருக்கிறார். அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் ஆளுகை செய்கிறார் (அப்.2) ஒரு நாள் அவர் மீண்டும் வருவேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

கிறிஸ்துவின் மரணத்தில் மனிதனை மீட்கும்படி இரத்தம் சிந்தப்பட்டது. (மத்.26; 28) கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஒருவன் கீழ்ப்படியும்போது அந்த இரத்தத்தோடு தொடர்பு கொள்கிறான். அப்பொழுது பாவங்கள் மன்னிக்கப்படுகிறது (அப்.2; 38; 22;16).

அவர் இன்றும் வாழ்கிறார், அவரைப் பின்பற்றுகிற நாமும் மரித்தாலும், ஒருநாள் எழுந்து தேவனோடும் அவரோடும் இருப்போம்.

**J.C. Choate** **J.C. சோட்**

# குடும்பம் பற்றி தேவனுடைய திட்டம்

முதல் குடும்பம் ஏதேன் என்னும் தோட்டத்தில் அமைக்கப்பட்டது. முதல் கணவனும், மனைவியுமாக ஆதாமும், ஏவாளும் இருந்தனர். ஏவாள் ஆதாமுக்கு ஏற்ற துணையாக உருவாக்கப்பட்டாள். ஏவாள் ஆதாமின் எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமாயிருந்தாள். இவர்கள் இருவரையும் கணவனும், மனைவியுமாக ஏற்படுத்தினவர் தேவன்.

## கணவனின் பொறுப்புகள்

ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை ஆண்டுகொள்ள வேண்டும். கிறிஸ்து எப்படி சபையை நேசித்தாரோ அவ்வளவாய் கணவன் தன் மனைவியில் அன்பு கூர்ந்து நேசிக்க வேண்டும் (எபேசியர்.5;25). தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தானே அன்புகூருகிறான் என்று வசனத்தின் மூலம் (எபே.5: 28) ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். கணவன் தன் மனைவியை போஷித்து காப்பாற்ற வேண்டும். கணவன் தன் தகப்பன், தாயை விட்டு பிரிந்து தன் மனைவியோடே இசைந்திருக்க வேண்டும். கணவனும், மனைவியும் ஒரே மாம்சமாகிறார்கள். மனைவியானவள் பலவீன பாண்டமாயிருப்பதினால் கணவன் அவளுக்குச் செலுத்த வேண்டிய கனத்தை செலுத்த வேண்டும். (I. பேதுரு.3;7) எப்படி பழைய ஏற்பாட்டில் யாக்கோபு தன் மனைவியாகிய ராகேலை நேசித்தாரோ (ஆதி. 29; 15-30) அந்த விதமாய் ஒரு கணவனின் அன்பு தன் மனைவி மீது இருக்க வேண்டும். மனைவிக்கு தலையாய் இருப்பவன் கணவன். ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரியமற்போனால் அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.

## மனைவியின் பொறுப்புகள்

மனைவியானவள் எல்லாவற்றிலும் தன் கணவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். (எபேசியர்.5; 24). மனைவி தன் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்க வேண்டும் (எபேசியர்.5; 33). சாராள் தன் கணவனாகிய ஆபிரகாமுக்கு பயந்து, கீழ்ப்படிந்திருந்தாள் (1. பேதுரு.3; 5,6). நீதிமொழிகளில் பார்க்கும்போது மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான். கர்த்தரால் தயையையும் பெற்றுக் கொள்ளுகிறான். என்றுள்ளது (நீதி. 18; 22). மனைவியானவள் வீட்டில் தரித்திருக்கிறவளாக இருக்க வேண்டும் (தீத்து.2; 5). மனைவியானவள் தன் கணவனிடத்தின் அன்பு செலுத்தாமலும், பிள்ளைகளை நேசியாமலும், தெளிந்த புத்தியில்லாமலும், கற்பில்லாமலும், வீட்டில் தரித்திராமலும், அன்பில்லாதவளும், கீழ்ப்படியாதவளுமாய் இருந்தால், அவள் நிமித்தம் வேத வசனம் தூஷிக்கப்படும். தேவனுக்குப் பயப்படுகிற ஒரு ஸ்திரீயின்

அலங்கரிப்பு யாதெனில், சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியே ஆகும். தகுதியான வஸ்திரத்தை உடுத்துகிறவளாக ஒரு மனைவி இருக்க வேண்டும். குணசாலியான ஒரு ஸ்திரீயைப் பற்றி நீதி. 31ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். தேவனுக்குப் பயப்படுகிற ஸ்திரீ ஞானம் விளங்க தன் வாயைத் திறக்க வேண்டும். தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்க வேண்டும். அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையே செய்கிறாள் (நீதி.31; 12 தேவனுக்குப் பயப்படுகிற ஸ்திரீ த்ன் பிள்ளைகளாலும், கணவனாலும் புகழப்படுகிறாள். அத்தோடு நின்றுவிடாமல் தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறதென்று கண்ணோக்கமாயிருக்கிறாள்.

## கிறிஸ்தவப் பெற்றோரின் பொறுப்புகள்

★ பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி.22;6).

★ கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபேசியர்.6; 4).

★ இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குப் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளை குறித்துப் பேசு (உபா. 6; 7) என்று பெற்றோர்களின் கடமைகள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.

★ பிரம்பைக் கையாளாதவன் தன் மகனைப் பகைக்கிறான் அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான் (நீதி. 13; 24)

★ பிள்ளையைப் தண்டியாமல் விடாதே; அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே. (நீதி. 23; 13, 14)

★ பழைய ஏற்பாட்டில் பார்க்கும் போது ஏலி தகப்பன் ஸ்தானத்தில் இருந்து கொண்டு தன் மக்களை கண்டியாமல் விட்டதால் பெரிய தவறு செய்துவிட்டான் "நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்ன யாவையும், அவன் மேல் அந்நாளிலே வரப் பண்ணுவேன்; அதைத் தொடங்கவும், அதை முடிக்கவும் போகிறேன். அவன் குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற் போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத் தீர்ப்புச் செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன்" (1. சாமு. 3; 12, 13). என்றுள்ளது.

★ ஈசாக்கும், ரெபேக்காளும் தன் குமாரர் மீது பாரபட்சம் காட்டினதால் தவறு செய்தார்கள். ஏசா வேட்டையாடிக் கொண்டு வருகிறது ஈசாக்கினுடைய வாய்க்கு ருசிகரமாயிருந்ததினாலே ஏசாவின் மேல் பட்சமாயிருந்தான் ரெபேக்காளோ யாக்கோபின் மேல் பட்சமாயிருந்தாள் (ஆதி. 25; 28) பெற்றோர்களுடைய பாரபட்சம் பிள்ளைகள் எதிர்காலத்தில்

ஒற்றுமையாயிருக்க விடாமல், இருவரும் விரோதியாகி, ஒருவருக்கொருவர் அஞ்சி வாழவேண்டிதாயிற்று. இன்றைக்கும் பல பெற்றோர்கள் இந்த மாபெரும் தவறை அமைதியாய் செய்து பிள்ளைகள் மத்தியில் விரோதத்தையும் பிரிவினையையும் ஏற்படுத்துகின்றனர்.

★ தகப்பன்மார்கள் மன்னிக்கும் சுபாவம் உடையவர்களாக இருக்கவேண்டும். லூக்கா.15; 11-24 வசனங்களில் மனந்திருந்திய மைந்தன் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தன் நிலையை உணர்ந்து, புத்தி தெளிந்து வந்தபோது, தன் சொத்தையெல்லாம் தன் மகன் அழித்துவிட்டபோதும், மனந்திரும்பியவுடன். அவனை தன் குமாரனாக அவன் தந்தை ஏற்றுக் கொண்டான். தந்தைமார்கள் மன்னிக்கும் சுபாவம் கொண்டவர்களாக இருப்பது அவசியம்.

★ பழைய ஏற்பாட்டில் மோசேக்கு பிறகு இஸ்ரவேலர்களை வழிநடத்திச்சென்ற தலைவன் யோசுவா. அவன் தனக்கு சோதனைகள் வந்தபோது மனதை அலையவிடாமல் உறுதியாய் நின்று தன் குடும்பத்திற்கு உத்தரவாதம் கூறினான். "நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்" (யோசுவா24; 15) என்றான் பெற்றோர்களாகிய நாமும் இதே மனஉறுதியுடன் இருக்க வேண்டும்.

★ தேவன் ஆபிரகாமைப் பற்றிக் கூறும் போது, "கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும், நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார் (ஆதி. 18; 19)

★ பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள் (கொலோ. 3; 21).

★ 1. சாமுவேல்.1; 20-22 ஆகிய பகுதிகளில் அன்னாளைப் பற்றி வாசிக்கிறோம். கர்த்தர் தனக்கு கொடுத்த பிள்ளையை கர்த்தருக்கே திரும்ப கொடுத்து விடுகிறாள். கர்த்தருடைய காரியம், அவருக்கென்று ஊழியம் செய்வது, கர்த்தர் சம்பந்தமான வேலைகள் செய்வது போன்ற காரியங்களுக்கு தன் ஒரே மகனையும் அர்ப்பணம் செய்யக் கூடிய தாய்மார்கள் இன்று தேவை.

★ யேசபேலைப் போன்ற ஒரு மோசமான தாயாக எந்த ஒரு தாயும் இருக்கக் கூடாது. தன் கணவனை கெடுத்து, தன் மகனையும் கெடுத்து, தீர்க்கதரிசிகளை கொலை செய்து, இப்படி பல தீமைகளை செய்த கொடிய பெண் யேசபேல். அவளைப் போல் நாம் ஒரு போதும் இருக்கக் கூடாது (1. ராஜா. 22; 52 16; 30, 31).

★ தீமோத்தேயுவின் தாயாகிய ஐனிக்கேயாளைப் போன்று நாம் இருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் வைராக்கியமாய் கர்த்தருடைய சபையை ஏற்படுத்தி நிருபங்களை எழுதிய அப்போஸ்தலன் பவுலே, "விசுவாசத்தில் நான் பெற்ற உத்தம குமாரன் என்றும், என்னைப் போல மனதையுடையவன்" என்றும் பாராட்டும் அளவுக்கு உயர்ந்த நிலையை தீமோத்தேயு பெற்றிருந்தான் என்றால் அதற்கு காரணம் தேவனுக்கு அடுத்து, அவன் தாய் ஐனிக்கேயாள்தான்.

★ தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை என்று உலகத்துமனிதர் சொல்வார்கள். வேதாகமும் இதை விட்டு வைக்கவில்லை. "இதோ, பழமொழி சொல்லுகிறவர்கள் எல்லாரும்; தாயைப் போல மகள் என்று உன்னைக் குறித்துப் பழமொழி சொல்வார்கள்" என்று எசேக்கியேல் புஸ்தகத்தில் வாசிக்கிறோம். (எசே. 16; 44) எனவே தாய்மார்கள் எல்லாக் காரியத்திலும் முன் மாதிரியாய் இருக்க வேண்டும்.

## பிள்ளைகளின் பொறுப்புகள்

- ❖ பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப் படியுங்கள். இது நியாயம், உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" (எபேசியர்.6;1-3).
- ❖ தேவையில் இருக்கும் தன் பெற்றோரை உபசரிக்காத பிள்ளை அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான். (1. தீமோ. 5; 8)
- ❖ வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை (பிர.12;1).
- ❖ ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப் படுத்துகிறான்.

  மூடத்தனமுள்ளவனோ தாய்க்குச் சஞ்சலமாயிருக்கிறான் (நீதி. 10; 1)
- ❖ உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணாதே. (நீதி. 23; 22)
- ❖ மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம் பண்ணுகிறான் (நீதி. 15; 5).
- ❖ இயேசு கிறிஸ்துவைப் போல, ஒரு பிள்ளையானது ஞானத்திலும், வளர்த்தியிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடையவேண்டும்.
- ❖ தீமோத்தேயுவைப் போல, கிறிஸ்தவப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் குழந்தைப் பருவத்திலிருந்தே வேத வசனங்களை படித்து கடைபிடிக்க வேண்டும்.

"கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும் (2 : தீமோ. 3; 15).

பிரியமானவர்களே, இந்த மாதம் கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள் இவர்கள் பொறுப்புகள் பற்றி வேத வசனம் சொல்லும் ஆலோசனைகளை பார்த்தோம். இதுதான் தேவன் ஒவ்வொரு குடும்பத்தின் மேலும் வைத்துள்ள திட்டம். இதன்படி செய்தால்தான் தேவ திட்டத்தை நாம் நிறைவேற்ற முடியும். தேவ திட்டத்தை நிறைவேற்றினால்தான் தேவன் சொல்லியிருக்கும் ஆசீர்வாதங்களை அநுபவிக்க முடியும். சரீரப்பிரகாரமான ஆசீர்வாதம் மாத்திரமல்ல, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். வேத வசனங்களின் ஆலோசனைப் படி நடப்போம். ஆமென்!

**ரேச்சல் ராஜநாயகம்.**

# வருந்தி அழைத்தும் வராதவன்

**ஆ**தியிலே அநாதி தேவனால் விசித்திர விநோதமாக உருவாக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம் செய்த முதல் பாவத்தால் வந்த சாபம் நீங்க ஸ்திரீயின் வித்து வருவார் என்று முதல் புத்தகத்தில் முதல் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது, அந்த முன்னுரை நூற்படி இந்நிலத்தில் முதல் முதலில் ஒரு ஆணின் துணையில்லாமல் அற்புதமாக கன்னி மரியாளிடம் பிறந்தவரும், கல்யாண வீட்டில் முதல் அற்புதத்தை செய்தவரும், சிலுவையில் மரித்து, மரணத்தை ஜெயித்து, இனி மரிப்பதில்லை என்ற நிலையடைந்து வாரத்தின் முதல் நாளில் உயிர்த்தெழுந்தவருமான இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் வாலிபர்களே! ஒரு மாத இடைவெளிக்குப் பின் உங்களை சந்திப்பதில் என் சிந்தை எல்லாம் அகமகிழ்கிறது.

பொதுவாக முதற்பிறந்த மகனுக்கு பொறுப்புச் சுமைகள் அதிகம் என்பார் பெரியோர். வேதாகமத்தில் நாம் முதற் பிறந்தவர்களைத் தேடிப் பார்த்தால், காணிக்கை ஏற்கப்படாததால் தாயின் கருவறையில் இருக்கும் அனுபவத்தை முதல் பெற்ற காயீன் முதல் கொலை செய்து தன் தம்பியின் முதல் கல்லறைக்குப் போன மனிதனாக்கினான். (ஆதி.4) ; பசி தாங்க முடியாமல் தம்பி சமைத்த கூழை ருசி பார்க்க தன் பாகத்தை விற்ற முதற்பிறந்த பாதகன் ஏசா (ஆதி. 25). தேவ சேனையை நிந்தித்தவனை போரில் சந்தித்தே தீருவேன் என்ற தணியாத வைராக்ய தாகம் கொண்ட தாவீதை தடை செய்த மூத்த குமாரன் எலியாப் (1. சாமு.17; 28) என்று பட்டியல் பயங்கரமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் தன் தாய்க்கு தலைமகனான இயேசு இந்தப் பட்டியலை மாற்றினார். அவர் இந்த பூவுலகில் மொழிந்த உவமை ஒன்றில் இரு குமாரர்களைப் பற்றி விவரிக்கிறார். அதில் முதற்பிறந்தவனை நாம் சற்று அருகில் சென்று பார்ப்போம் வாருங்கள்.

## மாம்சத்தில் வெளியேறவில்லை என்றாலும்...

நமது ஆண்டவர் இப்பூமியிலிருக்கையில் மொழிந்த உவமைகளை அதிகமாக எழுதிக் கொடுத்த பிரியமான வைத்தியன் லூக்கா, தன் நூலின் பதின் ஐந்தாவது அதிகாரத்தில், 100 ஆடுகளில் தொலை தூரம் சென்ற 1 ஆடு, 10 காசில் காணாமற்போன 1 காசு, 2 குமாரர்களில் கெட்டுப் போன 1 குமாரன் என்ற மூன்று உவமையை யாத்துக் கொடுத்திருக்கிறார். அதிலே மூன்றாவது உவமையை நாம் எடுத்து அதில் பேசப்பட்டுள்ள மூத்த குமாரனைக் கவனிப்போம்.

இளையவன் பாகப்பிரிவினை செய்தான், பணத்தை பெரிதாக எண்ணி பாசத்தை மறந்து வேஷத்தை நம்பி மோசம் போனான், என்பதைக் குறித்து நாம் நன்றாக அறிவோம். மூத்தவன் தந்தையின் சிந்தைக்கு வருத்தம் தர

விரும்பல்லை. ஆகவே, அவன் வீட்டை விட்டு வெளியேறவில்லை அவன் சோம்பேறி அல்லன்; தன் சகோதரன் வீடு திரும்பியபோது அவன் வயலில் இருந்தான் என்று வசனம் சொல்லுகிறது (லூக். 16; 29) அவன் ஒழுக்கமுள்ளவன் என்று பல நற்குணங்கள் நிறைந்தவனாக இருந்த போதிலும் "**இவனும் தனக்குண்டான தூர தேசத்திற்குப் போனான்**" என்று நாம் சொல்லலாம்.

சேராத இடம் தன்னில் சேர்ந்த தம்பி, செல்வம் எல்லாம் கரைந்ததினால் சகலமும் இழந்தவனாக, இளைஞனாக இருக்க வேண்டியவன் இழிஞனாக மாறி, **ருசிக்கு ஆகாரம் என்ற நிலை விடுத்து பசிக்குத் தவிடு என்று வெம்பி,** இனி நான் இங்கு இரேன் என்று **தன்நிலை உணர்ந்து தும்பி என விரைந்து வந்தான்** என்ற செய்தி கேட்டவுடன், பாசமல்லவா பொங்கி வந்திருக்க வேண்டும், திரும்பி வந்தவனிடம், இழந்த உறவு அரும்பி விட்டது என்று ஆரத்தழுவியல்லவாயிருக்க வேண்டும். **ஆனால் வயல்வெளியிலிருந்து வந்தவனுக்கு வந்ததோ சினம், அதுவும் தன் தகப்பனுக்கோ இது மகிழ்ச்சியான தினம்.**

மூத்த மகன், தன் சகோதரன் வீடு திரும்பியதை அறிந்து வெளியே நின்றுவிட்டான் என அறிந்த பாசமிகுத் தகப்பன் வெளியே வந்து வருந்தி அழைத்தான். வருந்தி அழைத்த தந்தைக்கு இவன் சொன்ன பதில் என்ன, "**ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும்**" என்கிறான் (15; 29). **தன் சுயநீதியைத் தாரை தப்பட்டை முழங்க பேசுகிறான்,** நாமும் கூட சில வேளை இப்படித்தான், அடுத்தவர் வழுவி விழுந்தால் நான் அவனைப் போல் இல்லை என்று பேசி "ஆவியின் எளிமையை" (மத்.5;3) மறந்தே போகிறோம், நம் இருதயத்தில் செய்யும் பாவமும் நம் ஆத்துமாவை பாதிக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்னும் அவன் அராஜகப் பதிலை கவனியுங்கள், "வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப் போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடன் கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான்" (15 ; 30). அவன் பயன்படுத்திய வார்த்தைகளை கவனியுங்கள். **"உம்முடைய ஆஸ்தி", "உம்முடைய குமாரன்" என்று ஏதோ இவனுக்கும் இந்த குடும்பத்திற்கும் ஒட்டும், உறவும் இல்லாதது போல பேசுகிறான்.** தன் உடன் பிறப்பை தன் சகோதரன் என்று கூட சொல்வதற்கு நாகூசுகிறது. இத்தனை தவறானவனாக இருந்தாலும், திருந்தி வந்து வருந்தி நிற்கையில், தானாடவில்லை என்றாலும், தன் சதையாடும் என்பார்கள். இவனுக்கு கல்லால் ஆன இதயம் போலும் உதயமற்ற பகலாக உலாவருகிறான்.

மன்னிப்பின் மனம் மருந்துக்குக் கூட இல்லை, தன் தகப்பனையே பாரபட்சம் பார்க்கிறவர் என்று கூறும் அளவுக்கு பாசமற்றவன் இவன், எனக்கு "ஒரு ஆட்டுக்குட்டியாவது கொடுக்கவில்லை அவனுக்கு

இத்தனையா?" (15; 29, 30) என்று பொறாமை என்னும் எலும்புருக்கியை தன் மனதிற்குள் வளரவிட்டான். நாம் ஒன்றை கவனிக்க வேண்டும், உம் சகோதரன் வந்தான் என்று கேள்விப்பட்ட உடன் அவனுக்கு முதல் வந்தது சந்தோஷமல்ல, கோபம் (லூக்கா.15; 28) கோபம் வந்தாலும், பாவம் செய்யாதபடிக்கு அதை கிள்ளி எறிந்திருக்கலாம். ஆனால் இவனோ அல்லி மலர் போன்ற அவன் தகப்பனின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது, முரண்டு செய்து துள்ளுகிறான்.

வீட்டிலே எங்கும் விழா, தகப்பனின் மனதிலோ மகிழ்ச்சியின் உலா, உறவுகளுக்கும் உற்றாருக்கும், சுற்றாருக்கும் பேருவகை. ஆனால், சாலையிலே நின்ற இவனோ வேறுவகை. எங்கும் மகிழ்ச்சி களிப்பு. இவன் முகத்திலோ சோகச் சுளிப்பு. சொத்தில் தன் பங்கும் சேர்ந்து போகும் என்ற ஏக்கம் இவனுக்கு வந்திருக்கும் வாய்ப்பிருக்கிறது. இவன் மாம்சப்பிரகாரமாக வீட்டை விட்டு வெளியே போகவில்லை என்றாலும், மனதளவில் நெடுந்தொலைவு சென்றான் என்பதே உண்மை. இவன் வீட்டிலேயே இருந்தும் தகப்பனின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத, அறிந்து கொள்ள முயற்சிக்காத விட்டில் பூச்சியாகவே இருந்திருக்கிறான். இளையவன் வந்தான், இனிய செய்தி தந்தான் என்று மகிழ்ச்சியாய் இருந்தான் தந்தை. ஆனால் இவனோ மற்றவரின் மகிழ்ச்சியை குலைக்கும் மட்டமான புத்தியுடையவனாக அல்லவா இருக்கிறான்.

## உணர்ந்து உள்ளே வா!


பாசமிகு தகப்பனோ, பரிவுடன் பதில் தருகிறார், மகனே நீ என்றைக்கும் என்னுடனே இருக்கிறாய்! நீ பெற்ற ஆசீர்வாதத்தை சற்று நினைத்துப் பார்! எத்தனை வேலையாட்கள், எத்தனை வசதிகள், எத்தனை சுகங்கள் என்று எண்ணிப்பார்! அது மாத்திரமா செல்வமே! எனக்குள்ளவைகள் எல்லாம் உன்னுடையதுதானே! என் பிரியமானவனே! நான் ஏதாவது ஒன்றை உனக்கு விலக்கியதுண்டோ சொல்! உன்னை கேட்பார் யார் உண்டு, உனக்கு எல்லாவற்றிலும் சுதந்திரம் இருந்ததே நீயே உன்னை பற்றி யோசித்துக் கொள்.

"உம்முடைய குமாரன்" என்று பிரித்துப் பேசுகிறாயே அவன் உன் சகோதரன் அல்லவா, இருவரும் ஒரு தாய் மக்கள் அல்லவா! அவன் நம்மைப்பொருத்தவரையில் மரித்தல்லவா இருந்தான் இப்பொழுது பிழைத்து வந்திருக்கிறானே, நீ இந்நேரம் பிழை செய்யலாமா? அவன் வந்தது பலா சுளை போல் அல்லவா உனக்கு இனிக்க வேண்டும், சரி இனியாவது வா நாம் மகிழ்ச்சியாக இருப்போம்! என்று வருந்தி அழைத்தான் தந்தை. ஆனால், இவனோ சிந்தை தெளிந்து வந்தவனைக் கண்டு சிந்தை மெலிந்து போனான். வருந்தி அழைத்தும் விருந்துக்கு போக இவனுக்கு மனமில்லை. வாலிபர்களே! நாம் இவனைப் போல் இராமல் இளையவனைப் போல் தவறான வழிக்கு ஒருவேளை சென்றிருந்தாலும் திரும்ப வருவோம், திருந்தி வருவோம். விண்ணவர் வருந்தி அழைக்கிறார் வாரீர் வாலிபரே. வருவீர் ஆசீர்வாதம் பெறுவீர்!

**ஜே. பீக்கின்ஸ்.**

**சிறுவர் பகுதி**

# கற்பாறைகளின் மீது கட்டுங்கள்



தலைப்பு வித்தியாசமாக இருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? எனக்கும் அது புரிகிறது. ஏன் இந்த தலைப்பை எடுத்தேன் என்று யோசிக்க வேண்டாம். நீங்கள் விடுமுறை நாட்களில் உங்கள் சிந்தனைகளை ஆவிக்குரிய காரியங்களில் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்துடனே அப்படிச் செய்தேன். நாம் விடுமுறையில் விளையாடினாலும், ஆவிக்குரிய காரியங்களிலும் கவனமாக இருக்க வேண்டுமல்லவா? தேவனும் நம்மிடம் இதைத்தான் எதிர்பார்க்கிறார்.

உங்களுக்கு புரிந்துகொள்ள சற்று சிரமம் என்று நீங்கள் உணர்ந்தால், அதை வசனத்தின் வழியாக உணர்த்துகிறேன் வாருங்கள். இயேசு, இந்த பூமியில் வாழ்ந்தபோது, ஒரு கதையைச் சொன்னார். அவர் இரு மனிதர்களைப் பற்றி கூறினார். அவ்விருவரில் ஒருவனை புத்திமான் என்றும் மற்றொருவனை புத்தி

யில்லாதவன்" அதாவது முட்டாள் எனவும் கூறுகிறார். ஏன் அவர் இப்படி கூற வேண்டும் என்று உங்களுக்கு உள்ளாக தோன்று மல்லவா?

இயேசு சொல்வதைக் கவனி யுங்கள். இவ்விரு மனிதர்களும் வீடுகளைக் கட்டினார்களாம். புத்திமான் தன் வீட்டைக் கட்டும் போது அதை கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப் பட்டதாய் கட்டினான். இப் பொழுதும் சிலர் வீடுகளை மிகவும் பலமான அஸ்திபாரங்கள் மேல் கட்டு கிறார்கள். 'அவன் வீடு கட்டி முடித்த பின்பு பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மீது மோதியும் விழவில்லை' என்று இயேசு கூறினார். இவனே "புத்திமான்", காரணம் இவன் தன் வீட்டை கன்மலையின் மேல் அஸ்திபாரம் அமைத்து அதின் மேல் வீட்டை கட்டினான்.

புத்தியில்லாத மனுஷனோ தன் வீட்டை மணலின் மேல் கட்டினான். பெருமழை சொரிந்து, காற்று அடித்து, பெருவெள்ளம் வந்து, அந்த வீட்டி ன் மேல் மோதியது. அந்த வீடு கீழே விழுந்தது. ஏன்? அதின் அஸ்திபாரம் மணலின் மேல் கட்டப்பட்டிருந்தது.

சரி, சற்று சிந்தியுங்கள்! ஏன் இயேசு இந்தக் கதையை கூறினார்? அவர் வீடு கட்டும் முறையையா கற்றுக் கொடுக்க ஆசையா யிருந்தார்? இல்லை! பின்னே என்ன பாடங்களைக் கொடுக்கிறார். சிறுபிள்ளைகளை இயேசு பலமான வாழ்க்கையை எப்படி கட்டுவது என்று நமக்குக் கற்றுக் கொடுக் கிறார். கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின மனுஷன் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிகிறவன்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் போதனைகளை அறிந்து, கீழ் படிந்து, அவர் கூறிய்வற்றை கேட்டாலே அது கன்மலையின் அஸ்திபாரத்திற்கு சமானம். அங்கு காற்று வீசினாலும் மழை அடித்தாலும் அது பலமாக நிற்கும். எல்லாரும் புத்திசாலிகளாக வேண் டும் என்று நினைப்பார்கள் நீங்களும் அப்படித்தானே? ஆகவே எனக்கன் பானவர்களே விடுமுறை நாட்களை வீணாக செலவிடாமல் இருப்போம். கற் பாறையின் மேல் கட்டுவோம்!



R. Abel Rodger Nayagam

# எபேசியர் ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : அப்போஸ்தலன் பவுல்

காலம் : சுமார் 60-62 கி.பி.

## இந்நூல் மற்றும் பட்டணம் பற்றி...

1. நான்கு சிறை நிருபங்களில் ஒன்று.
2. ரோமாபுரியில் முதல் முறை சிறையிலடைக்கப்பட்டபோது எழுதப்பட்டது (அப். 28; 30, 31)
3. சபையிலே கிறிஸ்துவுக்கு மகிமை என்பதை இது முன்னிலைப்படுத்துகிறது.
4. இச்சபை பவுலடியாராலே ஆரம்பிக்கப்பட்ட ஒன்று (அப். 18; 19, 20)
5. இப்பட்டணத்தில் தியானாள் தேவதையின் வணக்கத்திலிருந்து ஜனங்களை வெகுவாக மனமாற்றி வெற்றி கண்டார் (அப். 19; 23, 24).
6. "கிறிஸ்துவின் சபையைக்" குறித்து, பவுல் எழுதினவைகளில் இந்நூல் மிகவும் சிறப்பானதாக அழைக்கப்பட்டுள்ளது.
7. மத்திய தரைக் கடலிருந்து ஒரு மூன்று கிலோமீட்டர் தூரத்தில் பெரிய பட்டணமாகிய இப்பட்டணம் அமைந்திருந்தது.
8. ரோம சாம்ராஜ்யத்தில் அகாயா மகாணத்தின் பிரதான வியாபார கேந்திரமாக இது இருந்தது.

## இந்நூலின் செய்தி ...

1. கிருபையினாலே விசுவாசத்தின் மூலம் தான் இரட்சிப்பு (எபே.2; 8-10).
2. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தபோது, கிருபையினாலே எபேசியர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். (எபேசியர்.2;8,9,அப்.19; 1-8)

அ). நற்செய்தியைக் கேட்டார்கள் (எபே.1; 13, (ஆ) நற்செய்தியை விசுவாசித்தார்கள் (இ) பாவங்களிலிருந்து மனந்திரும்பினார்கள் (அப்.20; 21) (ஈ) ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்.19; 1-8) எபேசியர்.4; 5).

3. இயேசு கட்டினது ஒரே ஒரு சபைதான் (1; 22, 23; 4; 4-6)
4. ஒருவன் இரட்சிப்படைய அந்த சரீரமாகிய சபைக்குள் இருக்க வேண்டும் (எபே.4; 4.5; 23)
5. சபையானது தேவனுடைய நித்திய திட்டத்தில் இருந்தது (3; 8-11)
6. இறுதி இரட்சிப்பில் ஒருவன் பங்கடைய வேண்டுமானால், உண்மையுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது அவசியம். (4; 17, 5; 21; 6; 1-9).

# மகிமையின் இரத்தம்

இரத்தம் மனுஷனுடைய ஜீவனின் ஆதாரமாயிருக்கிறது இரத்த ஓட்டமில்லாத உடல் உயிரோட்டமில்லாமலும், உணர்வு இல்லாமலுமிருக்கும். இந்த பூமியிலே தேவன் சகல மனுஷரையும் ஒரே இரத்தத்தினால் உருவாக்கினார் (அப். 17; 26.) அந்த இரத்தம் பூமியிலே சிந்தப்படும்போது பேசாமலிருப்பதில்லை. அது சம்பந்தப்பட்டவர்களை தேவனிடத்தில் காட்டிக் கொடுக்கிறதாயும் பழிக்குப் பழி வாங்குகிறதாயுமிருக்கிறது. (லூக்கா : 11: 50, 51) பாவம் இரத்தம் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது என்பது எப்படி மெய்யோ அப்படியே பாவ மன்னிப்பும் இரத்தம் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. ஆகவே இதை ஆராய்ந்து அறிய என் மனம் விழைகிறது. நீங்களும் வாருங்கள்.

பிரியமானவர்களே! முதல் நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் நீதியையும் சமாதானத்தையும் உண்டாக்கினவராகிய ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் வரை பாவப்பட்ட இந்த பூமி ருசித்துப் புசித்து இன்னும் வேண்டும் வேண்டுமென்கிறது. இரத்த வெறி கொண்ட இப்பூமி பலவிதமான தீவிரவாதங்கள் பரவி கொடுமையின் கருவிகளாய் ஜீவனை அழித்து நாசப்படுத்தி, துப்பாக்கி முனையில் சமாதானத்தைத் தேடி அணுகுண்டு பாதையிலே அமைதியை தேடுகிறவனாயிருக்கின்ற இந்த மனிதர்களுக்கெல்லாம் தலைவனாய், தகப்பனாய் விளங்கிய காயீனை மறக்குமோ நெஞ்சம்! நீதிக்குத் தடையாய் சமாதானத்திற்கு சவாலாய் விளங்குகிற தீவிரவாதம் என்று ஒழியுமோ அன்றுதான் மனிதன் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியும்!

## ஆபேலின் இரத்தம்

பிரியமானவர்களே, நன்மை செய்து தேவ நீதியை நிறைவேற்றி தேவனுக்குப் பயந்து வாழ்ந்த முதல் நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் சிந்தப்பட்ட; ஆதி முதற்கொண்டு மனுஷகொலை பாதகனாகிய பிசாசின் ஆயுதமாய் நீதிமானை சங்கரிக்க காயீனின் கறைபடிந்த கரங்கள் துணிந்ததை அறிவோம். ஆணவத்தோடும், அகங்காரத்தோடும் செய்த அக்கிரமத்தை எண்ணி தேவனிடத்தில் பயந்திராமல் தேவனை எதிர்த்து எழுந்தான், பேசத்துணிந்தான், விழுந்தான் என்பதையெல்லாம் அறிவோம் (யோபு 37:20) நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் தேவனைக் கொண்டு நீதியைச் சரிகாட்டினதை அறிவோம். ஆபேலின் இரத்தம் தேவனிடத்தில் பேசினது ஆதி. 4; 9). ஆபேலின் இரத்தம் தீமைக்குத் தீமை செய்து நீதியை சரிகட்டும்வரை தேவனை நோக்கி கூப்பிட்டு முறையிட்டுக் கொண்டிருந்தது.

## இயேசுவின் இரத்தம்

ஆபேலின் இரத்தம் முதல் பரகியாவின் குமாரனாகிய சகரியா

இரத்தம் வரை இந்த பூமியிலே சிந்தப்பட்ட சகல நீதிமான்களின் இரத்தமும் பாவமன்னிப்பை கொடுக்கவில்லை. பாவத்தை, பூரண மாக்கவும் செய்யவில்லை. இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலே பாவம் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (லூக்கா.11; 49, 50) ஆபேலைப் போலவே இயேசுக்கிறிஸ்து தன் சகோதரராலே பகைக்கப்பட்டார். எரிச்சலினாலே காயீன் ஆபேலை கொலை செய்தான். இயேசுவும் பொறாமையினாலே கொலை செய்யப்பட்டார். நீதியை செய்ததினாலேயே ஆபேல் கொலை செய்யப்பட்டான். இயேசுவும் பிதாவின் நீதியை பேசி சமாதானத்தை விளங்கச் செய்ததினாலேயே கொல்லப்பட்டார். ஆபேலின் இரத்தத் தினாலே பாவமும் அக்கிரமும் வெளிப்பட்டது. ஆபேலின் இரத்தம், காயீனை, பாவி, கொலைகாரன், அக்கிரமக்காரன் என்று தேவனிடத்தில் வெளிப்படுத்தினது. ஆனால் இயேசுவின் இரக்கம் தன்னைக் கொலை செய்தவர்களை எப்படி அடையாளப் படுத்துகிறதென்று பாருங்கள். "பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று, ஆபேலின் இரத்தம் தன் சகோதரனைப் பகைத்து பிரிவினையை ஏற்படுத்தினது. இயேசுவின் இரத்தம் பகையை மறந்து சிநேகத்தை நாடினது. இயேசுவின் சிலுவையில் தான் பட்ட எல்லா உபத்திரவத்தையும் அவமானத்தையும் வேதனையையும் காரி உமிழ்ந்ததையும் பரியாசம் பண்ணினதையும் கொஞ்சமும் எண்ணாமல் தேவனிடத்தில் நமக்காக பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். இது இயேசுவின் இரத்தத்தின் மகிமை.

மனிதன் தன் பாவத்தினால் பாடுகளையும் துக்கங்களையும் சுமக்க வேண்டியவனாக இருந்தான். ஆனால் இயேசு நம்முடைய துக்கங்களை யெல்லாம் சுமந்தார். பாவம் செய்தது நாம், பழியை சுமந்தது அவர். அக்கிரம் செய்தது நாம். அடிக்கப்பட்டதும் நொறுக்கப்பட்டதும் அவர். (ஏசா.53; 4,5).

ஆபேலின் இரத்தம் சிந்தப்பட்டதிலே இந்தப் பூமியிலே பாவமும் அக்கிரமும் விதைக்கப்பட்டது. ஆனால் இயேசுவின் இரத்தம் பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பை அறுவடை செய்தது. ஆபேலைக் கொலை செய்தவனாகிய காயீன் சாபத்தினாலே நிறைந்தவனாய் நிம்மதியிழந்த வனாய் சமாதானமில்லாதவனாய் நிலையற்று அலைகிறவனாய் இருந்தான். இயேசுவின் இரத்தம் சாபத்தையெல்லாம் நீக்கினதோடல் லாமல் சமாதானத்தையும் கொடுத்தது. (ஏசாயா. 53; 5)

ஆபேல் யாருக்காகவும் எதற்காகவும் மரிக்கவில்லை. ஆனால் இயேசு அநேகருக்காக மரித்தார் (மத்.26; 28) 1. தீமோ.1;15 பாவத்தைப் போக்கும் பலியாக இயேசு வந்தார். பாவிகளுக்காக அக்கிரமக்காரருக்காக மரித்தார். நாம் பாவிகளாய், பெலனற்றவர்களாய் அக்கிரமக்காரர்களாய் நாம் இருக்கும் போதே நமக்காக மரித்தார் (ரோமர். 5; 6-8). ஆபேலின் இரத்தம் பகையையும் பிரிவினையையும் உண்டாக்கியது. இயேசுவின் இரத்தம் அன்பையும், தேவனிடத்தில் ஒப்புரவாகுதலையும் நமக்கு

உண்டாக்கினது. (எபேசியர். 2; 13-16 ரோமர். 5;8 யோவான். 3;16). ஆபேலின் இரத்தத்தி னாலே காயீன் பாவியாக்கப்பட்டான். இயேசுவின் இரத்தத்தினாலே மனிதன் நீதிமானாக்கப்பட்டான். (ரோமர். 5; 9).

ஆபேல் முதற் கொண்டு சகல நீதிமான்களின் இரத்தமும் சம்பந்தப் பட்டவர்களை பழிக்குப் பழி வாங்குவதையே விரும்புகிறதாயும், நியாயத் தீர்ப்புக்கும் மரணத்துக்கும் அழைத்துச் செல்லுகிறதாயும் இருக்கிறது. (வெளி 6; 9,10).

தீமைக்கு தீமை செய்து நீதியை சரிகட்டின ஆபேலின் இரத்தத்தை காட்டிலும் தீமைக்கு நன்மை செய்த இயேசுவின் இரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்க அது வல்லமையும் நீதியுள்ள தாகையால் நாமெல்லாரும் இரட்சிக்கப்படும்படி காத்திருக்கிறது. (எபி. 9; 28).

ஆகவே, ஆபேலின் இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நீதியை, நன்மையைப் பேசின இரத்தம் அது எபி. 12; 24. உண்மையிலேயே இயேசு வின் இரத்தம் மகிமையின் இரத்தமே.

இந்த மகிமையின் இரத்தத்தோடு சம்பந்தக் கொள்ளுவோம். ஜீவன் பெறுவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

**க. சேகர்** திருப்பூர்.


## மற்றுமொரு வாய்ப்பு

**நீங்கள் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி? என்ற நூல், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.**

**பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.**

**புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.**

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

# அதிக மேன்மையான வழி

(I. கொரி. 12: 31)

## எந்த மனோநிலையில் அந்நிய பாஷை பேசப்படுகிறது?

அற்புதங்கள் செய்யக் கூடிய வரங்களெல்லாம் எடுபட்டு போய் விடு மென்று பவுல் முன் கூட்டியே சொல்லியிருக்கிறார். அந்நிய 'பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்' ஆனால் பெந்தெகொஸ்தெகாரர்கள் இன்றைக்கும் அற்புதங்கள் செய்வதாகவும் அந்நிய பாஷைகளை பேசுவதாகவும் சொல்லிக் கொண்டு இருக்கின்றனர். புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள பாஷையை பேசுவதற்கு பதிலாக ஏதோ ஒன்றை உளறிவிட்டு போகின்றனர். சபை வரலாறு என்ன கூறுகிறதென்றால், முதல் நூற்றாண்டிலேயே அந்நிய பாஷை பேசும் வரம் எடுபட்டு விட்டது என்பதை உறுதி படுத்துகின்றது.

## எபேசுபட்டணம் பற்றி

I. எபேசு பட்டணம் பெருங்கடலின் (ஏஜியன் கடலின்) கிழக்கு கரையோரத்தில் அமைந்திருந்தது. இது ரோம சாம்ராஜ்யத்தின் கீழாக சின்ன ஆசிய பகுதியின் தலைநகரப் பட்டணமாகும். அது வியாபாரத்திற்கும், கலைநுணுக்கத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் பெயர் பெற்று விளங்கியதோடல்லாமல், அரசியலமைப்புகளின் மையமாகவும் திகழ்ந்தது. எபேசுவின் மேலுமொரு சிறப்பம்சம், அக்காலங்களில் கட்டிடக் கலையில் புகழ் வாய்ந்ததாகவும் இருந்தது.

II. அரங்கம்: எபேசுவிலே ஏறக்குறைய சுமார் 25,000 லிருந்து 50,000 பேர் வரை அமரும் வகையிலே அரங்கம் ஒன்று கட்டப் பட்டிருந்தது.

III. தியானாள் கோயில் : எபேசு மக்கள் கட்டினவைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்பட்டது "**தியானாள்**" கோயிலாகும். இக்கோயில் 400 அடி நீளமும், '240' அடி அகலமுமாகும். இக்கோவிலில் 60அடி உயரமுள்ள தூண்கள் நூறு இருந்தது. அவைகள் பளிங்கு கற்களினால் செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு தூணிலும் தியானாளின் உருவம் பொரிக்கப்பட்டிருக்கும். அன்றைய உலகின், ஏழு அதிசயங்களில் ஒன்றாக இக்கோயில் விளங்கியது.

இன்று மனோவியலாகவும், விஞ்ஞானப் பூர்வமாகவும் ஆராய்ச்சி செய்யப்பட்ட முடிவு. இன்று பேசுகிற அந்நிய பாஷை ஒரு அற்புதமல்ல (Not miraculous gift). அற்புத வரத்தினால் பேசும் மனித பாஷைகள் அல்ல. மூளையில் ஏற்படுகிற ஒருவித மாற்றத்தின் விளைவே இந்த உளறுதல் பாஷை. (Gibberish or non sense talk).

இன்றைய பெந்தேகொஸ்தே கூட்டங்களில் அந்நிய பாஷை பேசும் மக்கள்-குடும்ப பிரச்சனைகளினாலும், தனிப்பட்ட கடுமையான பாதிப்புகளினாலும் சிக்குண்டவர்களாகவே இருக்கின்றனர். மன அழுத்தங்கள், உள்ளான பாவத்தின் பாதிப்புகள் நிறைந்தவர்கள், இப்படிப்பட்ட மக்களுக்கு விசுவாசித்து நடத்தல் போதுமானதல்ல. திருப்தியானதல்ல! இப்படி ஏதாவதொன்றை சத்தமிட்டு உளறுவதால் மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெற்ற உணர்வைப் (Emotional release) பெறுகின்றனர். பயிற்சி மற்றும் அடுத்தவர்கள் பேசுவதை அப்படியே காப்பியடித்து ஒரு குழந்தையைப் போல ஏதாவதை உளறிவிட்டு, புரியாத ஒரு பாஷையை பேசும்படி தேவன் எனக்கு உதவி செய்தார் என்பார்கள்?!

"பவுல் A குவால்பன்" என்ற மனோதத்துவ நிபுணரின் ஆராய்ச்சியின் விளைவு :

தற்கால அந்நிய பாஷை பேசுவோரில் 85 சதவீதம் ஏதோ ஒரு வகையான படபடப்பு நிறைந்த பிரச்சனைகளில் உழன்று கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை, திருமண பிரச்சினை, மன அழுத்தம், பொருளாதாரப் பிரச்சனை, பாவத்தின் ஆழமான குற்ற உணர்வு. ஆனால் பாஷை பேசாத ஜெப குழுவில் இருப்பவர்களில் ஒரு சிலரே இப்படிப்பட்ட பிரச்சனைகளை கொண்டிருந்ததாக சோதனையில் கண்டுபிடித்துள்ளராம்.

ஆகவே அந்நிய பாஷை பேசுவதற்குரிய காரணங்கள். பயிற்சியின் மூலம், மற்றவர்களை பார்த்து காப்பியடிப்பதின் மூலம் என்று நிரூபணமாகிறது. அது மட்டுமல்ல மனோநிலையில் ஏற்படும் பாதிப்புகள் அவை 1. தனிப்பட்ட மன உணர்வுகளில் குழப்ப நிலையின் உச்சம் 2. தீர்க்கப்படாத ஆவிக்குரிய பதட்டம் 3. பலவீனப்பட்ட (நோய்ப்பட்ட) ஆவிக்குரிய ஜீவிதம்.

பெந்தேகொஸ்தே கூட்டத்தில் போய் ஒருவர் சேருவதற்கு காரணம் :

மனோநிலையில் காணப்படும் சில குழப்ப நிலையே தவிர, சத்தியத்தின் தெளிவோ அல்லது அவர்கள் சொல்லிக்கொள்கிறபடி பூரண சுவிசேஷமோ அல்ல. பெந்தெகொஸ்தெ கூட்டம் ஒரு உணர்ச்சி மயமான கூட்டமே தவிர, ஆவிக்குரிய கூட்டமல்ல. ஆரோக்கியமான கூட்டமுமல்ல.

தாங்கள் செய்கிற மாம்ச பூர்வமான உணர்ச்சிகளின் கொந்தளிப்பை - தேவன் எனக்கு கொடுத்த வரம் (Gift) என்று சொல்லுவது மாபெரும் தவறு ஆகும்.

பிரச்சனைகளுக்கு தீர்வு அந்நிய பாஷை பேசுவதல்ல ஆனால் அநேகர் இந்த பாதையைத்தான் தேர்ந்தெடுக்கின்றனர். இது வருந்த வேண்டிய ஒரு காரியம்.

நம்முடைய விசுவாச வாழ்க்கையோ நம்முடைய ஆத்துமாவிற்கு திருப்தியை அளிக்கிறது. நம்முடைய உணர்வுகளுக்கு நம்மை அடிமைப்படுத்தாமல், ஆவியானவர் நம்மை வசனத்தின் மூலம் நடத்தி செல்ல அனுமதிக்கிறது. இப்படிப்பட்ட சபை ஐக்கியத்தில் நமக்கு, உடன் பங்காளிகளாலும், உடனாளிகளாலும் அநேகர் இருக்கின்றார்கள். கிறிஸ்துவின் சிலுவை பலியினால் நம்முடைய பாவ உணர்விற்கு - இங்குதான் பதில் உண்டு - தேவனுடைய ராஜ்யத்தை கட்டுகின்ற உன்னதபணியில் நம்முடைய வாழ்க்கையின் நோக்கமிருக்கிறது. உயிர்த்தெழுதலினால், நமக்கு மரணத்தினால் ஏற்படும் பயத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது (யோவான். 10; 10) "இயேசு, ஜீவன் பரிபூரணபடவே வந்தார்".

ஒரு கிறிஸ்தவனுடைய விசுவாச வாழ்க்கையே, திருப்திகரமான வாழ்க்கையின் அச்சாரமாகவும், உணர்வுகளின் உறைவிடமாகவும் இருக்கிறது. ஏனெனில் நாம் சத்தியத்தை பின்பற்றுகிறோம். உணர்வுகளினால் மாத்திரம் நாம் நடந்தால் அநேக சமயங்களில் நாம் தவறான பாதையில் நடத்தப்படுவோம். பாவம் - அநித்தியமான சந்தோஷம் தான் (எபி. 11; 25). மனித இருதயம் வஞ்சித்து விடும் (நீதி. 3; 5-6; 14; 12; எரே, 17; 9) கடைபிடிப்பதினால் ஒருவன் சந்தோஷமான உணர்வினை பெறமுடியும்.

ஆனால் சந்தோஷமான உணர்வினாலே ஒருவன் உண்மை சத்தியத்தை பின்பற்ற முடியாது.

தற்கால பாஷை பேசுவோர். தங்கள் உணர்வுகளினால் உத்தமமாக, தவறுதலாக நடத்தப்படுகின்றனர். அந்நிய பாஷை பேசுவது அவர்களுக்கு நல்லதாக படலாம், அது அவர்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட வரம் என்றும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அது தேவ பார்வையில் சரியல்ல. இது பயிற்சியினாலும் பழக்கத்தினாலும் மனிதனாலும் கொடுக்கப்படுகிற அற்பமான ஒன்று (Absolutely not from God). ஆனால் ஆண்டவருடைய மெய்யான சபை-அர்த்தமுள்ள ஆராதனையின் அனுபவத்தையும், ஆழ்ந்த தியான, ஜெப ஜீவியத்தின் அனுபவத்தையும், சகோதர சிநேகத்தின் அன்பின் ஐக்கியத்தினையும் கொடுத்து வருகிறது.

உலகெங்கிலுமுள்ள கிறிஸ்துவின் சபையில் இப்படிப்பட்டவைகளே காணப்படுகிறது. அந்த சபையே தேவனால் கிரயத்திற்கு வாங்கப்பட்ட சபை (அப். 20; 28) அந்த சபையை மீட்கவே இயேசு மீண்டும் வருகிறார் (எபேசியர். 5; 23).

வந்து கொண்டிருக்கிற கர்த்தரை நோக்கி சென்று கொண்டிருக்கிற சபை. "கிறிஸ்துவின் சபை"

தமிழில் : **வே. தானியேல் துரைராஜன்**

திருச்சி.

# மனுஷருக்குள்ளே மேன்மை

## தேவனுக்குமுன்பு அருவருப்பு

**நா**ம் அனைவரும் மற்றவர் முன்பு மேன்மையாக மதிப்பாக எண்ணப்பட விரும்புகிறோம். அதற்கேற்ப நாம் நம் நடை, உடை பாவனைகளை அமைத்துக் கொள்வதில் கவனமாயிருக்கிறோம். இல்லையெனில் மற்றவர் நம்மை கேலி செய்வார்களோ என அஞ்சுகிறோம். ஆனால் நம் ஆண்டவர் இயேசு இதைப் பற்றிக் குறிப்பிடும்போது... மனுஷக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுவது, தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" என்ற சிந்திக்கத்தக்க கருத்தை, அவர் கருத்தைக் கேட்டு பரியாசம் பண்ணின பரிசேயரிடம் சொன்னார். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இக்கருத்தை கவனமாய் ஆராய தேவன் தாமே நம்மை வழி நடத்துவராக.

பொதுவாக மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிற சில காரியங்களைப் பார்ப்போம்;

## 1. பிறப்பு மற்றும் குலம்:

தமிழ்நாட்டில் மனிதனுடைய பிறப்பு, குலம், கோத்திரம் போன்றவை மேன்மையாக எண்ணப்படுகிறது. உயர் ஜாதி, தாழ்ந்த ஜாதி என பகுக்கும் கொடுமைகளை கண்டு நாம் வருந்துகிறோம். உண்மையில் "மனுஷர் அனைவரையும் தேவன் ஒரே ரத்தத்தினால் உண்டாக்கினார்" என்று வேதம் (அப்.17; 26) தெளிவுபடுத்துகிறது.

தேவனுடைய பார்வையில் யாராயிருப்பினும் அவர்கள் "மறுபிறப்பு" அடைந்தார்களா? என்பதே (யோவான்.3; 5) முக்கியமாகும்.

## 2. இளமை வாலிபம் :

மனுஷர் மத்தியில் இந்த வயதுக்கு மிகுந்த மேன்மை தரப்படுகிறது. வாலிபமும் இளமையும் முக்கியமான ஒன்றாயிருப்பினும் ஆலோசனையை தள்ளி சீரழியும் ஆபத்து நிறைந்த ஒன்றாயிருக்கிறது (1. ராஜா. 12ம் அதி) என ரெகொபெயாம் வாழ்க்கையிலிருந்து புரிகிறது. நியாயத் தீர்ப்பை பற்றி கவலைப்படாமல் மகிழ்ச்சி ஒன்றே குறிக்கோள் என்று கண்மூடித்தனமாக இருக்கும் பருவம் இது என பிர. 11; 9-ல் சாலமோன் எச்சரிக்கிறார். அசுத்தப்படக்கூடிய வாலிபத்தை வசனத்தால் பாதுகாக்க சங்கீதக்காரன் (119; 9) ஆலோசனை சொல்கிறான்.

ஆகவே, சுயசித்தம், இச்சை, பெரியோர் ஆலோசனை தள்ளுதல் ஆகியவை உள்ள வாலிபமும் இளமையும் தேவனுக்கு அருவருப்பாகவே உள்ளது. அப்படியல்லாமல் இவைகளை விட்டு

மனந்திரும்பி வரும் வாலிபரை தேவன் தகப்பனைப்போல அணைத்துக் கொள்கிறார் (லூக் 15; 20)

**3. அழகு, சௌந்தரியம்:**

போட்டி வைக்குமளவு மேன்மையாக எண்ணப்படும் இந்த அழகு தேவனுக்குப் பயப்படாத ஒருவரிடம் இருப்பது பிரயோஜனமற்றது. வீண்(நீதி. 31; 30) மட்டுமல்ல அது மற்றவரை ஏமாற்றி மன நோகவைக்கும் வஞ்சனையுள்ளது. இதை இச்சியாதே என வேதம் (நீதி. 6; 25) எச்சரிக்கிறது. தவறு செய்யும் அழகுள்ள பெண், பன்றியின் மூக்கிலுள்ள மூக்குத்திக்கு சமானம் என்று யாருமே சொல்லாத, சொல்லமுடியாத உதாரணத்தை நமது வேதம் (நீதி.11; 22) மட்டும் சொல்கிறது.

ஆகவே இருதயத்தில் சுத்தம், சாந்தம், கீழ்படிதல் இவைகளே அலங்காரம் மற்றும் உண்மை அழகாகும் (I. பேதுரு. 3 ; 1-4).

**4. திறமையும், பராக்கிரமும்:**

மற்றவரிடம் இல்லாத திறமையும் பலமும் ஒருவரிடம் இருக்கும்போது மனுஷர் அதை மேன்மையாக எண்ணுகின்றனர். அதற்காக லிம்கா புத்தகம், கின்னஸ்புத்தகம் என்று அநேக விஷயங்கள் உண்டு. ஆனால் இவையெல்லாம் அற்பபிரயோஜனமுள்ளது என்று I. தீமோ.4;8-ல் பவுல் வலியுறுத்துகிறார். ஒருவனுக்கு பெலனைத் தருகிறவர் தேவன் என்று (ஏசாயா.40; 29-31) வேதம் சொல்கிறது (II. கொரி. 12; 9).

## நடப்புச் செய்திகள்

- ராணிமேரி கல்லூரி இடிக்கப்பட்டு, அந்த இடத்தில் தலைமை செயலகம் கட்டப்படும் என்று அரசு அறிவிப்பு, மாணவிகள் கொதிப்பு
- இலங்கை அதிபர் சந்திரகா இந்தியா வருகை
- ஈராக் போர் : பாக்தாத்தை கைபற்றுவோம் என்று புஷ் சூளுரை, புதிய அரசமைப்பதில் தீவிரம்.
- கிரிக்கெட் : டாகாவில் மூன்று நாடுகள் பங்கேற்கும் போட்டிகள் ஏப்ரல் 11ம் தேதி முதல் ஆரம்பம்.
- சார்ஸ் என்னும் புதிய ஆட்கொல்லி நோய் இந்தியாவுக்கு பரவும் ஆபாயம்.
- பாக்தாத் மீது அமெரிக்க விமானப்படை விடிய விடிய தாக்குதல். சதாம் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.
- சீனாவில் புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

**5. படிப்பு, அறிவு, ஞானம் :**

உலகில் மிக மேன்மையாக எண்ணப்படும் இவை தேவனுக்கு முன்பாக பைத்தியமாக இருப்பதாக, மெத்த படித்த அப்போஸ்தலன் பவுல் (I.கொரி.1; 20) சொல்லுகிறார். காரணம் உலக ஞானத்தினால் ஒருவன் உண்மையான தேவனைக் கண்டு கொள்ள முடியவில்லையே! கடவுள் இல்லை என்பவர் அறிவாளி என உலகம் சொல்கிறது. அப்படிப்பட்டவன் மூடன் என்று (சங்.14; 1) தேவம் சொல்கிறது. பொல்லாப்பு செய்து நிறைய சம்பாதித்தவனை புத்திசாலி என்று மனிதன் சொல்கிறான். ஆனால் பொல்லாப்பைவிட்டு விலகுவதே புத்தி என்று தேவனுடைய வார்த்தை சொல்கிறது. (யோபு.28 28). ஆகவே, உண்மை தேவனை அறியும் அறிவே உயர்ந்தது. அதை தருபவர் தேவனே, (சங். 94; 10) கிறிஸ்துவே நமக்கு ஞானம் (1. கொரி.1; 31).

**6. கௌரவம், ஜீவனத்தின் மேன்மை :**

இது தேவனால் உண்டானது அல்ல என்றும் உலகத்தினால் உண்டானது என்று (1. யோவான்.2; 16) மூப்பர் யோவான் சொல்கிறார். ஆனால் கிறிஸ்துவுக்கு சொந்தம் என சொல்லிக் கொள்பவர்கள் கூட அநேகர் இன்று கௌரவத்திற்காக கடன் வாங்கி செலவழிப்பதையும் பின்பு எங்களுக்காக ஜெபியுங்கள் என்று புலம்புவதையும் பார்க்கிறோம். சிலர் விழா நிகழ்ச்சிகளுக்கு நகைகளைக் கடன் வாங்கி அவை காணாமற் போய் அவதிப்படுவதும் உண்டு. எச்சரிக்கையாய் இருப்போம் இவை பிதாவினால் உண்டானதல்ல. தகுதி மீறி பிள்ளைகளை உயர்ந்த பள்ளிகளில் சேர்த்து கடன்பட்டு அவதிபடும் குடும்பங்களையும் நாம் காண்கிறோம். தேவன் நம்மை சமாதானமாயிருக்கும்படிக்கே அழைத்திருக்கிறார்.

எனவே நமக்கு மிகுந்த ஆதாயமான போதுமென்கிற மனதுடன் கூடிய தேவபக்தி (1. தீமோ. 6; 6) நிச்சயம் தேவன் நம்மை (எபி. 13; 5) கைவிடமாட்டார். (சங். 34; 19)

**7. கட்டளையை மீறி நடப்பது :**

பெற்றோர், ஆசிரியர், கணவன், மேலதிகாரி, சபை ஊழியர் போன்றவர்களை அசட்டை செய்வது மனுஷர் மத்தியில் மேன்மையாக இருக்கலாம்! கீழ்ப் படியாமையை ஆதியில் ஆவிக்குரிய மரணத்தை வருவித்தது; இஸ்ரவேலர் கானான் தேசம் சேரமுடியாமல் போனது. மனுஷனுடைய கோபம் தேவ நீதியை நடப்பிக்காமல் மதிகேட்டை நடப்பிக்கிறது (நீதி.14; 17). மிகுதியான பேச்சும், பரியாசமும் தேவபிள்ளைகளுக்கு தகாது. மேலான அதிகாரமுள்ள யாவருக்கும் கீழ்ப்படிய வேண்டியது தேவனுடைய கட்டளை (ரோமர்.13; 1).

**8. உயர் பதவிகள் :**

உயர் பதவிகளில் இருப்போர் மேன்மையாக எண்ணப்ப

அரசியல், அரசாங்கம், தனியார் கம்பெனிகள், அல்லது கிறிஸ்துவின் சபைகளில் கூட உயர் பதவியில் இருப்போரும், அதிக வருமான முள்ளவரும் மதிக்கப்படுகின்றனர். இதனால் இவர்கள் மேட்டிமையாகி மற்றவரை மதியாமல் தேவசித்தத்திற்கு விரோதமாக போகும் அபாயமுண்டு. அப்படிப்பட்டவர்கள் (எபேசியர்.6 ; 9) கடுஞ்சொல்லை விட்டுவிட வேண்டும். இல்லையெனில் நேபுகாத்நேச்சாளைப் போல தள்ளப்பட்டுப் போவார்கள் (தானி.5; 20).

மேலும் தேவன் நமக்கு அளிக்கும் பதவிகள் மற்றவர்களுக்கு உதவ இருக்கலாம் (எஸ்தர்.4; 14) என்பதைக் கருத்தில் கொண்டு தாழ்மையாய் நடப்போம்.

## 9. புகழ், பாராட்டு:


இதை விரும்பி தேவனுடைய வார்த்தையும் மீறி நடப்பவர் உண்டு. புகழ் குறைந்துவிடுமோ என்று தங்கள் பாவங்களை மறைத்து வாழும் மாய்மாலக்காரர்கள் உண்டு (நீதி. 28; 13). ஆனால் நாம் தேவனுடைய இரக்கத்தைப் பெற அவருக்கு உண்மையாய் நடக்க வேண்டும். எல்லா மனுஷரும் உங்களைப் புகழும்போது உங்களுக்கு ஐயோ (லூக். 6; 26). ஆனால் அது சீக்கிரம் அழியும் (1. பேதுரு.1; 24). இந்தப் புகழுக்கு ஏங்கி சிலர் ஒருவரே போதகர் (மத்.23; 8) என்ற வசனத்தை மீறி தங்கள் பெயருக்குப் பின்னால் போதகர் என்ற வார்த்தையை சேர்த்துக் கொள்கின்றனர். அவர்களை இயேசு கண்டிக்கிறார் (மத். 23; 4-10) ஆகவே ஃபாதர், (பிதா) குரு போன்ற அடை மொழிகளை கிறிஸ்து தடை செய்திருக்கிறார். இப்படிப்பட்டவர்களை வெளி வேஷம் அணிபவர்கள் என இயேசு சொல்கிறார் (மத். 23; 28).

## 10. பணக்காரர், ஐசுவரியவான் :

ஜீவ புஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டிருப்பதற்கு மகிழாமல் (லூக்கா.10; 20) பாஸ் போர்ட், விசாவில் பெயர் வரவில்லை என ஏங்குபவர் பலர். பண ஆசை எல்லா தீமைக்கு வேராயிருந்தாலும் அந்த ஆசை அநேகரை தேவனை விட்டு தூரமாக அள்ளிக் கொண்டு போகிறது. சிலர் ஏழ்மையில் நீதியாய் நடந்து பணம் சேர்ந்ததும் பிறருக்கு உதவாமல் அநீதியாய் (ஆகானைப் போல் - யோசுவா.7; 20) நடப்பதைக் காண்கிறோம். இவர்கள் தேவனுடைய தோட்டத்தில் பலன் தர முடியாது (லூக். 8; 14). மோசே போல் அநித்தியமான பாவ சந்தோஷத்தை வெறுத்தால் மட்டுமே கனி தர முடியும் (எபி.11; 26) சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள் (1. தீமோ. 5; 6) கிறிஸ்துவுக்காய் நஷ்டமடைய தயாராக இருத்தல் அவசியம் பிலிப்பியர்.3; 11 ஏழ்மையும், துன்பங்களும் சாபமல்ல! திடன் கொள்ளுங்கள் தேவன் நம் பக்கமே(யாக்கோபு.2; 5).

ஆகவே, ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளின்படி தேவனாலே மாத்திரம் வரும் மகிமையை (யோவான்.5; 44) தேடுவோம். ஆமென்.


**K. பாண்டியன்,** அரக்கோணம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45-9.00 p.m.<br>9.00-9.15 p.m. | Box 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00-2.15 p.m. | Box 80<br>Kakinada - 533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box 8405<br>Bangalore - 560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Dell
Annual Subscription Rs. 30/

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த
வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by Church of Christ, Kangayam
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : S. Rajanayagam